பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 14 சனிக்கிழமை (30.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 277

# பொதுத் தேர்தலுக்கு முன்பாக ஜனாதிபதித் தேர்தல் வரும்?

## அடுத்த ஆண்டு இறுதியில் நடத்த மஹிந்த உத்தேசம்

கொழும்பு,ஓகஸ்ட் 30

திடீர்ப் பொதுத் தேர்தல் ஒன்று குறித்து தென்னிலங்கை அரசியலில் பேச்சுகள் அதிகம் அடிபட்டாலும், பொதுத் தேர்தல் ஒன்றை இப்போதைக்கு நடத்துவதில்லை என்று தீர்மானித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முதலில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்தித் தனது பன்னிரெண்டு ஆண்டு கால அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே அடுத்த பொதுத்தேர்தல் குறித்துச் சிந்திப்பது என்ற முடிவில் இருக்கிறார் எனத் தெரிய வருகின்றது.

இதற்கமைய, அடுத்த ஆண்டு நவம்பர் மாதத்துக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி தனது அடுத்த பதவிக் காலத்தை உறுதிப்படுத்திய பின்னர் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அவர் உத்தேசித்திருக்கின்றார். (12ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் நேற்று விமானக் குண்டு வீச்சு

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி, பூநகரி மற்றும் நாச்சிக்குடா பகுதிகள் மீது நேற்று விமானப் படையினரின் ஜெற் விமானங்கள் தாக்குதலை நடத்தின.

பூநகரிக்கு வடக்கே சுமார் நான்கு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆட்லறி மற்றும் மோட்டார் தளங்

(12ஆம் பக்கம் பார்க்க)

நல்லைக் கந்தன் தேரில் அருட்காட்சி அளிக்கும் போது...



## மட்டக்களப்புச் சிறையில் அதிகாலை வேளை குண்டு வெடித்தது!7 கைதிகள் படுகாயம்!!

### அவர்களில் ஐவர் ஈ.பி.டி.பியினர்

மட்டக்களப்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் ஐவர் உட்பட ஏழு சிறைக் கைதிகள் படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்று அதிகாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த சிறைக்கைதிகள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். படுகாயமடைந்தவர்களுள் ஈ.பி.டி.பி. பிரதேசப் பொறுப்பாளரான ஈழமாறன் ரவியும் அடங்குகிறார்.

மேற்படி கைதிகள் தங்கியிருந்த சிறைக்கூடத்தினுள்ளேயே இக்குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை கண்டல் பகுதி முன்நகர்வு முறியடிக்கப்பட்டதாகப் புலிகள் அறிவிப்பு

வவுனியா, ஓக.30

முகமாலை கண்டல் பகுதியில் நேற்று அதிகாலை 5 மணிக்கு படையினர் மேற்கொண்ட முன்நகர்வு நடவடிக்கையை தாங்கள் முறியடித்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## நல்லைக் கந்தனின் தேர்ப் பவனி காண பல்லாயிரக் கணக்கில் திரண்டனர் பக்தர்கள்

யாழ்ப்பாணம், ஓக 30

வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழாவின் நேற்றைய தேர்த்திருவிழா, பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்ள மிகவும் பக்தி பூர்வமாக நடைபெற்றது.

வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து காலை 7 மணிக்கு முருகப்பெருமான் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள் காட்சி அளித்தார்.

அரோகரா கோஷமும், கந்தா, வேலா என்ற முருக கோஷங்களும்-

விடிவு தா! இன்னல்களையும் நீக்கிவிடு! கண் திறந்து எங்கள் அவலத்தை போக்கிவிடு! என்ற வேண்டுதல்களும்-

வானில் சங்கமித்து ஒலிக்க, மயிற்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக அபயக்கரம் காட்டி தேரில் வீதி வலம் வந்தார்.

அடியார்களின் பஜனைகளும், பக்தி கீதங்களும் காற்றலையில் கலந்து தெய்வீகம் பரப்ப-

கற்பூரச் சட்டிகளின் புகைமண்டலம் மேகத்தை மறைக்க-

அழகு முருகன் வள்ளி தெய்வானை சமேதராக தேரில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் நாளையும் நல்லூர் பி.செ.பிரிவில் ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம், ஓக.30

நல்லூர் உற்சவத்தை ஒட்டி நல்லூர் பிர தேச செயலர் பிரிவில் இன்றும் நாளையும் முழுமையாக ஊரடங்கு நீக்கப்படும் என்று பலாலி படைத்தலைமையகம் அறிவித்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழி கரையோரத்தில் மீட்கப்பட்ட இளைஞனின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஓக 30

நாவற்குழி கடற்கரையில் கரை ஒதுங் கியதாகத் தெரிவித்து இளைஞன் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு யாழ்.பொலிஸாரால் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாக்குச் செல்லுமாறு ஹெலிகள் வன்னிப் பகுதிகளில் துண்டுப் பிரசுரம்

வவுனியா,ஓக. 30

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்களை அங்கிருந்து வெளியேறி வவுனியாவுக்கு வருமாறு துண்டுப் பிரசுரங்களை மீண்டும் விமானப்படையினர் வீசி வருகின்றனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நளினியை விடுதலை செய்யக் கூடாது தமிழக அரசு உயர் நீதிமன்றில் பதில் மனு

### மகாத்மா காந்தி கொலை வழக்கை எடுத்துக் காட்டுகிறது

சென்னை, ஓக.30

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் படுகொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்துவரும் நளினி, ஜெயக்குமார், றொபேட் பயஸ் ஆகியோரை சிறையில் இருந்து விடுதலை செய்யக்கூடாது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவிலேயே இப்படித் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மாநில அரசு கொள்கை அளவில் இந்த முடிவெடுத்துள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஆயுள் தண்டனை அனுபவித்துவரும் தன்னை முன்கூட்டியே விடுதலை செய்ய தமிழக அரசுக்கு உத்தரவிடக்கோரி நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். இதேபோன்று ஜெயக்குமார், பயஸ் ஆகியோரும் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்கள் சம்பந்தமாக விசாரணை செய்து வந்த உயர் நீதிமன்ற நீதிபதி எஸ்.

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மாகாண மட்ட விளையாட்டுப்போட்டி யாழ். வீர, வீராங்கனைகள் நால்வர் சம்பியன்

வவுனியாவில் நேற்று முடிவடைந்த மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் யாழ்.பாடசாலைகளைச் சேர்ந்த நால்வர் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த இரு தினங்களாக இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டிகள் நேற்று பூர்த்தியடைந்தன.

மெய்வன்மைப் போட்டிகளில் 11வயது பெண்கள் பிரிவில் ஏ.பிரியதர்சினி (சுண்டுக்குழி மகளிர்), 13வயதுப் பெண்கள் பிரிவில் ஏ.ஜோய் கருண்யா(சுண்டுக்குழி மகளிர்), 15வயது ஆண்கள் பிரிவில் சி.மடோன் எல்விஸ்(சென்பற்றிக்ஸ்), 17 வயதுப்பிரிவில் சி.ஜக்சன் (சென்.பற்றிக்ஸ்) ஆகியோர் சம்பியன்களாகத் தெரிவாகினர்.

இம்முறை போட்டிகளில் விசேட அம்சமாக மெய்வன்மைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு போட்டி முடிவடைந்தவுடனேயே பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நேற்று இடம்பெற்ற போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

**பெண்கள்**

* நீளம்பாய்தல்- 13வயது- எம்.ஜோய் கருண்யா(சுண்டுக்குழி மகளிர்), 11 வயதுப் பிரிவு - ஏ.பிரியதர்சினி (சுண்டுக்குளி மகளிர்), எஸ்.மேரி நிலக்சனா (இளவாளை கன்னியர்மடம்)
* உயரம்பாய்தல்- 13வயது- எம்.ஜோய் கருண்யா(சுண்டுக்குழி மகளிர்), எம்.சிந்துயா (மகாஜனா).
* 800மீ- 17வயது- ஆர்.காவேரி (அருணோதயா)
* குண்டு எறிதல் - 17வயது - கே.கஜனி (மகாஜனா).
* 200மீ 13வயது- இரண்டாமிடம்- ஜே.ரி.சில்வி சர்ளினி (இளவாலை கன்னியர் மடம்), 17 வயது - இரண்டாம் இடம் ஆர்.ஜக்சனா (அருணோதயா).
* ஈட்டி எறிதல்- 17வயது- சி.யசோதா (வாதரவத்தை விக்னேஸ்வரா).
* 100மீ.தடைதாண்டல்- 17வயது ரி.மதுரா(சுண்டுக்குழி மகளிர்).
* தடியூன்றிப்பாய்தல்- 17வயது- எஸ்.தனுஜா(அருணோதயா).
* 4x400 அஞ்சலோட்டம் - 17 வயது (அருணோதயா).

**ஆண்கள்**

* உயரம் பாய்தல்- 15வயது- ஜே.ஜனந்தன் (மகாஜனா), 17வயது- எம்.கிருஷ்ணா (மகாஜனா), வை.பிரசாத் (நெல்லியடி ம.ம.வி).
* 800மீ- 17 வயது- என். மதிராஜ் (மானிப்பாய் இந்து).
* 400மீ-15 வயது- ரி.திவாகர் (ஹாட்லி).
* 200மீ- 15 வயது- சி.ஆர். மடோன் எல்விஸ் (சென். பற்றிக்ஸ்), 17 வயது - சி.ஜக்சன் (சென். பற் றிக்ஸ்), கே. நிரூஜன் (மீசாலை வீரசிங்கம்).
* தட்டெறிதல்- 17வயது- இரண்டாம் இடம்- எஸ்.ஹரிகரன்(யாழ்.சென்றல்), 15வயது-கே.மொஸ்கீரன்(மகாஜனா), எஸ். ஹதீஸ் (ஹாட்லி).
* முப்பாய்ச்சல்- 17வயது- எஸ். லகீசன் (மகாஜனா).
* 100மீ. தடை தாண்டல்- 15 வயது- சி.ஆர். மடோன் எல்விஸ் (சென் பற்றிக்ஸ்).
* தடியூன்றிப் பாய்தல்- 17வயது- ஆர்.சிறீனிதரன் (தும்பளை சைவப்பிரகாசா)
* 4x400 அஞ்சலோட்டம்- 17 வயது - மானிப்பாய் இந்து. (01)

## அரச வேலைகளுக்கு சிமெந்து ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஒக. 30

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள சிமெந்தில் அரச வேலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சிமெந்தின் விவரம் இன்று செயலக விளம்பரப்பலகையில் பார்வைக்கு வைக்கப்படும்.

ஒதுக்கீடு கிடைத்தவர்கள் ஒருபைக்ற் சிமெந்தை 1600 ரூபாப்படி யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச்சங்க சமாசத்தில் செலுத்தி எதிர்வரும் 3ம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (1)


## கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சக உத்தியோகத்தர்

**அமரர் சந்தியா யேசுதாசன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம், வலிகாமம் வடக்கு, பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்).

(ஜி/554483)



## STUDY IN SINGAPORE, MALASIA, INDIA AND AUSTRALIA

ஒரு வருட நிறைவின் பின் Tranfer to U.K, USA, Australia, New Zeeland University.

★ 100% VISA உத்தரவாதம்
★ IELTS/TOEFL அவசியம் இல்லை
★ விரும்பிய அனைத்து துறைகளிலும் கல்வி கற்கலாம்
★ குறைந்த தகைமை G.C.E (O/L)
★ பகுதிநேர வேலை வாய்ப்பு (சிலதுறைகளுக்கு)
★ பாதுகாப்பான போக்குவரத்து மற்றும் தங்குமிடவசதி
★ மாணவர்கள் Student Visa உடன் செல்லலாம்

உடனடி பயண ஏற்பாடு

தொடர்புகளுக்கு

**Bright Future Institute**

T.P. 0786858553

(யாழ். மாணவர்கள் யாழில் மேலதிக தொடர்புகளை பெற்றுக் கொள்ளலாம்).



ராஜா 2 யாழ்ப்பாணம்

75 ஆவது நாளை நோக்கி

சகல

கமல்ஹாசன், அசின்

தசாவதாரம்



காட்சிகள் 10.30–2.00



## விற்பனைக்கு

சகலவிதமான அலங்கார மீன்கள், மீனுக்கான மருந்துவகை, அலங்காரப் பொருள்கள், வர்ணக்கற்கள், 2அடி நீளமான லக்கி மீன்கள், பூஞ்செடிகள் போன்றன விற்பனைக்குண்டு.

தொடர்பு:- "திருப்பதி"

மெமோரியல் வீதி, மானிப்பாய்.


## தவறிவிட்டது

சுப்பிரமணியம் விமலதாசன் என்பவருடைய தே.அ.அ. இல (653373058V), இன்சூரன்ஸ், சாரதி அனுமதிப்பத்திரம் என்பன பேர்சுடன் நல்லூருக்கும் கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- வெள்ளெருவைப்பிள்ளையார் கோயிலடி, கோப்பாய் மத்தி.
தொ.பே. 0779044219


## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**External Pharmacist Course**
**(Ceylon Medical College Council)**

கல்வித்தகைமைகள்: GCE O/L ஆங்கிலம் சாதாரணசித்தி, GCE A/L இரசாயனம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களில் சித்தி

பயிற்சி வகுப்புக்கள் : 8.00 - 2.00 (ஞாயிறு)

ஆரம்பம் : 31.08.2008 ஞாயிறு காலை 8.00 மணி

குறிப்பு : இப்பரீட்சைக்கு வயது எல்லை இல்லாதபடியால் மேற்படி தகைமை உள்ளோர் இக்கற்கை நெறிக்கு இணைந்து கொள்ளலாம்.

Further Details
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road
(Near Commercial Bank)
Jaffna.


## நூல் வெளியீடு

யாழ்.பல்கலைக் கழக முதுகலை மாணி கற்கை நெறியின் பிரதேசத்திட்டமிடல் மாணவர்களின் அனுசரணையுடன்யாழ். போதனா வைத்திய சாலைக் கணக்காளர் நா.இராசநாயகத்தினால் எழுதப்பட்ட 'அரச அலுவலகதாபன நடைமுறை' நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

யாழ். பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் எம். மரியதாசன் ஜெகூ தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலாளர் கே.கணேஷ் வெளியீட்டுரையையும் நிகழ்த்துவார்.

யாழ். பல்கலைக் கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி க.தேவராசா மதிப்பீட்டுரையை நிகழ்த்துவார்.

யாழ். பல்கலைகழகத்தில் முதுகலை மாணி கற்கை நெறியைத் தொடரும் மாணவர்களை இந்த வெளியீட்டு [illegible] கலந்து [illegible] கேட்கப்பட்டுள்ளது.


New batches start on:- 14.09.2008

**CAD & BS** (காலம்:- 6 மாதம்)

Diploma in Computer Aided Drafting And Building Studies

**கட்டடத்துறையில் உங்கள் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்**

கட்டடத் தொழில்நுட்பவியலாளர்கள், கட்டடத் தொழில்நுட்பமாணவர்கள் க.பொ.த (உ/த) கற்றோர் கவனத்திற்கு! உங்களுக்காகவே நவீன தொழில்நுட்ப யுக்திகளை உங்கள் துறையில் பிரயோகிக்கதக்க வகையில் வடிவமைக்கப்பட்ட விசேட கற்கைநெறி. இக்கற்கை நெறி இத்துறையில் உங்கள் உயர்கல்வியை தொடரவோ அல்லது வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ள ஓர் சிறந்த அத்திவாரமாகும்.



Course Contents :
1.Building Technology
2.Construction Materials
3.Building Services
4.Building Drawings
5.Quantity Surveying
6.Basic Theory of Structures
7.Computer Aided Drafting

**CBM** (காலம்:- 6 மாதம்)

Diploma in Contemporary Business Management

**முகாமைத்துவத்துறையில் உங்கள் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்.**



இக்கற்கை நெறியானது முகாமைத்துவத் துறையில் பணிபுரிவோர் மற்றும் இத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு நவீன முகாமைத்துவத்தின் எண்ணக்கருக்களையும், சமகால தகவல் தொழில்நுட்ப, தொழில்நுட்ப பிரயோகங்களையும் பயன்படுத்த தக்கவகையில் வடிவமைக்கப்பட்டதாகும். இக்கற்கை நெறி இத்துறையில் உங்கள் உயர்கல்வியை தொடரவும், வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளவும் ஓர் சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்தி தருகின்றது.

Course Contents :
1. Management & Organizational Behaviour
2. Human Resource Management
3. Marketing Management
4. Financial Management
5. [illegible]ess Communication
6. [illegible] For Managers

**IIS CITY CAMPUS**

#200, Sivan Pannai Road, Jaffna
Tel:021 222 8060 Fax:021 222 [illegible]
Email:iiscc@sltnet.lk Web: iiscit[illegible]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி முத்தம்மா சின்னத்துரை



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், கைதடி வடக்கை வசிப்பிடமாகவும், தற்போது கனடாவில் (Toronto) வசித்தவருமாகிய திருமதி முத்தம்மா சின்னத்துரை 26.08.2008 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2008) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் HIGHLENT Funeral Home, 3280 Shepart Avenue, shareorugh, Toronto, Canda வில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.ஜெகதீஸ்வரன் (ஜெயன் - மகன்),
மாசுவன் சந்தி, நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

கைதடி வடக்கு,
கைதடி. (77563)

### விஸ்வலிங்கம் தம்பிராஜா
(ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்)



சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில்(தெமட்டகொட) வசித்து வந்தவருமான விஸ்வலிங்கம் தம்பிராஜா 26.08.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - தண்டிகைப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான தம்பியையா- மீனாட்சி தம்பதியினரின் மருமகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் கிருபாகரன், இந்திராணி, கமலநாதன், யோகராணி, புஸ்பராணி, ஸ்ரீதர், சுரேஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகிர்தாம்பாள், செல்வநாயகம், இராஜரத்தினம் (V.V.R), நாகராஜா, இராசாம்பிகை, ஜெயராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற துரைராஜாவின் மைத்துனரும், கோசலா, செல்வரஞ்சன், மஞ்சுளா, இரட்ணரூபன், கணேஷமூர்த்தி, சிவதர்மிகா, சிந்துமதி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சுதுவெல்ல மலர்ச்சாலையில் (இல.110, கொலன்னாவ றோட், தெமட்டகொட) அஞ்சலிக்காக வைக் கப்பட்டு நாளை(31.08.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பி.ப 3மணியளவில் தகனத்திற்காக பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 74, பேத் றோட்,
தெமட்டகொட,
கொழும்பு 09.
T.P:0771629307

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உள்ளூர் உணவு உற்பத்தியைத் துரிதப்படுத்துவதற்கென நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திருநெல்வேலி விவசாயப் பயிற்சிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தலைமையுரை நிகழ்த்துவதையும், அருகில் கலாநிதி சிவமதி சிவச்சந்திரன், யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், மத்திய அரசால் நடத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற நெடுந்தீவைச் சேர்ந்த எஸ்.சண்முகம் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

## பாடசாலைகளில் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் பூர்த்தியாகி ஒரு வருடமாகியும் கொடுப்பனவு இல்லை

யாழ்ப்பாணம்,ஒக.30

தென்மராட்சியில் 'யுனிசெப்' நிறுவனத்தினரால் பாடசாலைகளில் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்ட வேலைகள் பூர்த்தியாகி ஒரு வருடமாகியும் இதுவரை அதற்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட வில்லை. இதனால் இவ்வேலைகளை மேற்கொண்ட பாடசாலை அபிவிருத்திச் சபைகள் லட்சக்கணக்கான தொகை முடங்கியதால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு உரிய கொடுப்பனவு உறுதிச் சீட்டுகள் கடந்த டிசெம்பர் மாதத்தில் நிறுவனத்திடம் வழங்கியபோதிலும் இதுவரை கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லையெனவும், இதனால் இவ்வேலைகளைப் பொறுப்பேற்று நிறைவேற்றிய பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் வலயக் கல்வி அலுவலகங்களுக்குத் தினமும் அலைவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி கல்வி வலயத்தில் 26 பாடசாலைகளில் வகுப்பறை, தற்காலிக வகுப்பறைத்திருத்தம் மற்றும் பாடசாலை தளபாடங்கள் திருத்தம் ஆகிய அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ் வேலைகளுக்கென யுனிசெப் நிறுவனத்தினால் ஒதுக்கப்பட்ட 35 லட்சம் ரூபா இதுவரை வழங்கப்படாத நிலை காணப்படுவதாகவும் பாடசாலைகளின் அபிவிருத்திச் சபையினர் தெரிவித்தனர். (202-207)

## நில அளவைத் திணைக்கள தொழில்நுட்ப சேவைப் பரீட்சைக்கு 33 பேர் தெரிவு

யாழ்ப்பாணம்,ஒக.30

இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் தொழில்நுட்ப சேவைகளில் உள்ள வெற்றிடங்களுக்கான போட்டிப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்தைகச் சேர்ந்த 33 பேருக்கு அனுமதி அட்டைகள் பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிப் பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் விவரங்களை யாழ்.மாவட்ட நில அளவை அலுவலகத்தில் பார்வையிடலாம். (202)

## அரச வைத்தியசாலைகளின் பணியாளர்கள் நோயாளர்களுக்கு தரமான சேவையை வழங்கவேண்டும்

குருநகர்,ஒக.30

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச வைத்தியசாலைகளில் சேவைபுரியும் பணியாளர்கள் நோயா ளர்களின் நலனில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். தரமான சேவையை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

வடமாகாண சுகாதார அமைச்சுச் செயலாளர் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள சுகாதாரப் பிரச்சினைகளை அறிவதற்காக திருகோணமலையில் இருந்து யழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை கடந்த புதன்கிழமை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சேவைபுரியும் ஊழியர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் உரை நிகழ்த்தினார். இக்கூட்டம் மேற்படி அலுவலக மாநாட்டு மண்டபதில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் கல்வி அறிவு உள்ளவர்கள், எம் மத்தியில் அறிவுள்ள சமூகமே தற்போது உள்ளது. மக்களை அரச சேவையில் உள்ளவர்கள் ஏமாற்றக்கூடாது. மக்களை எவரும் ஏமாற்றவும் முடியாது. மக்களுடன் நோயாளர்களுடன் அன்பாகப் பழகவேண்டும்.

அரச வைத்தியசாலைகளுக்கு தமது நோய்க்கான சிகிச்சையைப் பெறுவதற்குச் செல்வதை விடுத்து, சிலர் தனியார் வைத்தியசாலைகளுக்கு ஏன் செல்கிறார்கள் என்பதனை அரச வைத்தியசாலைகளில் சேவை புரிபவர்கள் கருத்தில்கொள்ள வேண்டும்.

தனியார் வைத்தியசாலைகள் நோயாளர்களுக்கு மனநிம்மதியைக் கொடுப்பனவாக உள்ளன. அங்கு சேவைபுரிபவர்கள் நோயாளர்களுடன் அன்பாகக் கதைத்து அன்பாகப் பழகுகிறார்கள். இதனை அரச வைத்தியசாலைகளில் சேவை செய்பவர்கள் பின்பற்றவேண்டும். நோயாளார்களை அன்பாக வரவேற்று அவர்களுடன் அன்பாகப் பழகிச் சேவை புரிவது எமது கடமையாகும் - என்றார். (202-51)

# தென்னிலங்கையிலிருந்து கிடைக்கும் வாய்ப்புகளை குடாநாட்டு விளையாட்டுத்துறை சரியாகப் பயன்படுத்துமா?

யாழ். குடாநாடு விளையாட்டுத் துறைமீது தென்னிலங்கை விளையாட்டுத் துறையின் பார்வை அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றமை வரவேற்கத்தக்கதும் பாராட்டத்தக்கதும் ஆகும். இதனை எமது வீரர்களும் விளையாட்டு ஆர்வலர்களும் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்துடன் யாழ்ப்பாணத்தில் உள்ள இரண்டு உதைபந்தாட்ட லீக்குகள் இணைந்துள்ளன. மற்றொரு லீக்கும் இணைவதற்கான முழு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

அதேபோல் இலங்கை கிரிக்கெட் சங்கத்துடன் யாழ்ப்பாணக் கிரிக்கெட் சங்கமும் இணைந்து செயற்பட்டு வருகின்றது.

அத்துடன் மெய்வல்லுநர் சங்கத்துடன் யாழ்ப்பாணம் மெய்வல்லுநர் சங்கமும் மத்தியஸ்தர்களும் (தொழில்நுட்ப அலுவலர்கள்) இணைக்கப்பட்டுள்ளமையும் பயனுடையதாக உள்ளது.

இன்னும் கூறப்போனால் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கமும் இலங்கை கரப்பந்தாட்டச் சங்கதுடன் இணைக்கப்பட்டு போட்டிகளை நடத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

வலைப்பந்தாட்டச் சங்கம் நீண்டகாலமாக இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கத்துடன் இணைந்து ஏதோ ஒருவகையில் தேசிய மட்டத்தில் வீராங்கனைகளுக்கான பயிற்சிகள் மற்றும் தேசிய மட்டத்திலான தெரிவுகளில் கலந்துகொள்ளும் நிலைக்கு உயர்ந்துள்ளமை பாராட்டக்கூடியதும் வரவேற்கத்தக்கதும் ஆகும்.

இதேபோன்று அண்மையில் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம், பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கம், பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் என்பனவும் போட்டிகளை விறுவிறுப்பாக நடத்தத் தொடங்கியுள்ளன.

கரப்பந்தாட்டப் போட்டியொன்று அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்டது. இந்தப் போட்டி மாகாணம், மாவட்டம், தேசியம் என நடத்தப்பட்டது. இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட போட்டிக்கு ஏற்பட்ட செலவுகள் மற்றும் பரிசுகளுக்காக வழங்கப்பட்ட தொகை வெறும் 6ஆயிரம் ரூபா மட்டும்தான்.

யாழ்ப்பாணக் கரப்பந்தாட்டச் சங்கம் மிகுதிப் பணத்தைப் போட்டு வெற்றி பெற்ற கழகங்களுக்கு பணப் பரிசில்களை வழங்கித் தமது கழகங்களை கௌரவித்தமையும் சுட்டிக்காட்டப்படவேண்டியதாகும். இறுதியில் வெற்றிபெற்ற யாழ்.மாவட்டக் கழகம் தேசிய மட்டத்தில் இடம்பெற்ற போட்டியில் கூட கலந்துகொள்ளமுடியாத நிலைமையும் ஏற்பட்டது.

இதில் இன்னும் ஒரு விடயம் என்னவென்றால் வடக்கு - கிழக்கு தவிர்ந்து ஏனைய மாவட்டம், மாகாணங்களில் இருந்து எத்தனை கழகங்கள் தேசிய மட்டப் போட்டியில் கலந்துகொள்ளமுடியும் என போட்டிக்கான நிபந்தனைகள் அனுப்பப்பட்டபோது குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அதில் வடக்கு - கிழக்கு விடயம் இறுதியில் தீர்மானிக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டு இருந்தமை சற்றுச் சிந்திக்க வேண்டிய விடயமே.

இதேபோன்று கழகங்களுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டிகள் கொழும்பில் பல நிறுவனங்களின் அனுசரணையுடன் இடம்பெற்றன. இதிலும் யாழ்.மாவட்ட அணி கலந்துகொள்ளவில்லை.

இதற்கு யாழ்ப்பாணக் கிரிக்கெட் சங்கம் காரணமா? அல்லது இலங்கைக் கிரிக்கெட் சங்கம் உரிய முறையில் வாய்ப்பை வழங்கவில்லையா? என்பது கேள்விக்குரியது. இது தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டன.

இதில் எது உண்மை, எது பொய் என்பதைக் கூறவேண்டிய பொறுப்பும் கடமையும் உரியவர்களையே சாரும். கிரிக்கெட் சங்கத்துக்கு புதிய நிர்வாகம் அமைக்கப்பட்ட பின்னர் மாவட்ட மட்டத்தில் கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படவில்லை. மாவட்ட வீரர்கள் தெரிவு இடம்பெறவில்லை என்றெல்லாம் விமர்சனங்களும் கருத்துகளும் எழுகின்றன. இது தொடர்பாகவும் உரியவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த விடயத்தில் அண்மையில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் தலைவரும், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபருமான ஏ.நோயல் விமலேந்திரன் குறிப்பிட்ட விடயம் வரவேற்கத்தக்கதும் செயற்படுத்தக்கூடியதும் ஆகும்.

"மாவட்ட மட்டத்திலான அணிகள் என்பது போட்டிகளின் அடிப்படையில் வருடாந்தம் தெரிவுசெய்யப்பட்டு அறிவிக்கப்படவேண்டும். யாழ்.மாவட்டம் தவிர்ந்து ஏனைய மாவட்டங்களுடன் விளையாடும் சந்தர்ப்பம் கிடைத்தால் விளையாடலாம். விளையாட முடியாது என்ற காரணத்தைக் கூறி மாவட்ட மட்டத்திலான பாடசாலைகளின் அணிகளை குறிப்பாக 15, 17 வயதுப் பிரிவு அணிகளை உருவாக்கமல் விடக்கூடாது'' எனத் தெரிவித்தார் அவர்.

இந்த நடைமுறை அனைத்து விளையாட்டுக் கழகங்களுக்கும் பொருத்தமானதாக அமையும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

இலங்கை கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் கூடைப்பந்தாட்டப் போட்டி ஒன்று அண்மையில் மிகவும் சிறந்த முறையில் நடத்தப்பட்டது. உடுவில் மகளிர் கல்லூரி அதிபரும் ஆசிரியர்களும் இதனைச் சிறப்பாக நடத்தியிருந்தார்கள்.

இது பாராட்டப்படவேண்டிய முயற்சியாகும். இந்தப் போட்டி 17 வயதுப் பெண்களுக்கு மட்டுமே நடத்தப்பட்டது. ஏனைய 15, 19 பிரிவுகளுக்கும் குறிப்பாக ஆண்களுக்கும் இந்தப் போட்டியை நடத்தவேண்டியது அவசியமாகும்.

போட்டிகளை நடத்தி முடித்தால் மட்டும் போதாது. மாவட்ட மட்டத்திலான வீரர்கள், வீராங்கனைகள் தெரிவுகள் இடம்பெறவேண்டும். அவர்களுக்கு உரிய தொடர் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும்.

தென்னிலங்கையில் உள்ள சங்கங்கள், சம்மேளனங்கள் என்பவை ஏனைய மாவட்டங்களின் கழகங்கள், பாடசாலைகளுக்கு எத்தகைய உதவிகளை வழங்குகின்றார்களோ அந்த உதவிகள் யாழ். மாவட்டத்திற்கும் கிடைக்க வழி செய்ய வேண்டியது இங்குள்ள துறைசார்ந்தோரின் பொறுப்பும் கடமையும் ஆகும். அதனை அவர்கள் செய்வனே செய்யவேண்டும்.

— வின்னன் —

## கொழும்பில் இடம்பெறும் தேசியப் போட்டிகளில் யாழ்.வீரர்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுகிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கிறோம்



21.08.2008 வியாழக்கிழமை நடைபெற்ற எமது திருமண வைபவத்தில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும், மலர்மாலை அளித்தவர்களுக்கும், வாழ்த்து மடல்கள் வழங்கியோருக்கும், அன்பளிப்புக்கள் வழங்கியோருக்கும் எமது திருமணத்துக்கு அனைத்து வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரம்மஸ்ரீ ந. பிரசாந்தசர்மா
லாவண்யா தம்பதிகள்
உடுக்கியவளை விநாயகர் கோவில்,
வட்டுக்கோட்டை.

(77537)


வசீகர தோற்றத்திற்கு

## சந்தனாலேப



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப் பட்டை, கஸ்தூரி, மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச் சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவுசீடுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும்.

சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் வீனேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணைப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO A/L 250


# இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18 . 04 . 1953



மறைவு
23 . 08 . 2006

அமரர் அப்பாத்துரை விமலநாதன் (நாதன்)
திதி:அமாவாசை

எட்டாத தூரம் சென்று நீர்
எண் மூன்று திங்கள் சென்றாலும்
என்றும் ஏங்குகிறோம்
எம்முடன் நீரிருக்க!

புன்னாலைக்கட்டுவன்
தெற்கு, சுன்னாகம்.

தாய், மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேர்த்தி.

(சி/554473)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
அரியகுட்டி
நாகராசா
(கிருஷ்ணா சைக்கிள்வேக்ஸ்
K.K.S றோட், கொக்குவில் சந்தி)

மலர்வு
12.02.1939

உதிர்வு
11.09.2007

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'விஷ்ணுபதி''
சிவகுரு லேன்
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(77548)

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை



இந்தியா, எழுமலை நகரில் 31.07.2008 அன்று
சிவபதமெய்திய எங்கள் பாசமிகு அன்புத் தெய்வம்
அமரர்
**சிவலிங்கம் அழகரத்தினம்**
அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அன்னாரின் இல்லத்தில் இன்று (30.08.2008) சனிக்கிழமை நண்பகல் 12மணியளவில் நடைபெறும்.

இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

''துரையகம்''
பிரான்பற்று,
பண்டத்தரிப்பு.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.
(மங்கணா ஸ்ரோர்ஸ்)

(77545)

## சுகாதார அதிகாரிகள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.30

சாவகச்சேரிப் பிரதேசத்தில் மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் போசாக்குக் கண்காட்சியினை சிறப்புற நடத்திய சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட சேவையாளர்கள் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரே இவர்களுக்கு சிறப்புச் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கவுள்ளனர்.

இன்று சனிக்கிழமை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க. தா. சிவபாதம்முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி இ.பரமேஸ்வரன் தலைமையில் இந் நிகழ்வு இடம் பெறும்.

(202-207)

## சமய சந்நிதிகளில்

காரைநகர் கிழவன்காடு ஸ்ரீ கந்தசுவாமி ஆலய அலங்கார உற்சவம் இன்று சனிக் கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பதினேழு நாள்கள் இடம்பெற உள்ளது.

உற்சவ நாள்களில் தினமும் பகல்விசேட அபிஷேகமும் மாலை வசந்த மண்டபப் பூசை யைத் தொடர்ந்து சுவாமிவீதி உலா வருதலும் இடம்பெறும்

* * *

தம்பசிட்டி, மாயக்கை அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை பகல் வேட்டைத்திருவிழாவும், மாலை சப்பறத் திருவிழாவும், மறுநாள் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பகல் 10 மணிக்கு தேர்த்திரு விழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

## தவறிவிட்டது

500-0171 இலக்க மோட்டர் சைக்கிளின் இராணுவப் பதிவுச் சான்றிதழ் பத்தமேனிக்கும், நீர்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆவரங்கால் மணி ஸ்ரோஸில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலியில் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கும் அரசடி அம்மன் வீதிக்குமிடையில் Street Line பிரச்சினையற்ற இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

கஜன் குறூப்
76 B, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

## காசாளர் தேவை

பிரபல கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு காசாளர் தேவை. வயது 40 இற்கு மேல் தமிழ், சிங்களம், ஆங்கிலம் பேசத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும். நேரில் வரவும்

தொடர்பு: 55, 57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

## விற்பனைக்கு

சணல் 3 மறி ஆடுகள், 1 கிடாய், 4 அடுப்பைக் கொண்ட (மின்சார, காஸ்) அடுப்பு, 3 சிறிய அலுமாரிகள் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: [illegible]
காவேரி மில்,
புலவனார் வீதி,கல்வியங்காடு.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சர்வதாரி வருடம் ஆவணித்திங்கள் 16 ஆம் நாள் (01.09.2008) திங்கட்கிழமை முற்பகல் 9.14 மணி முதல் 10.14 மணி வரை அமைந்துள்ள உத்தரட்டாதி நட்சத்திரமும் துலாலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்



சங்கானை காளிகோயிலடி
திருநாவுக்கரசு தம்பதிகளின்
புதல்வன்
திருநிறை செல்வன்
**மதிவதனன்**
அவர்களுக்கும்

நீர்வேலி காமாட்சியம்பாள் கோயிலடி
செல்வராசா தம்பதிகளின்
புதல்வி
திருநிறை செல்வி
**மகிழாயினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு யாழ்ப்பாணம் சட்டநாதர் கோயிலின் அருகில் அமைந்துள்ள திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் நிகழப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி வ. திருநாவுக்கரசு,
காளிகோயிலடி,
சங்கானை.

திருமதி ச. செல்வராசா
திரு.திருமதி பேரம்பலம்
(செல்லத்தம்பி)
நி.மு:- நீர்வேலி வடக்கு; நீர்வேலி
த.மு:- 40/2, கலைமகள் வீதி,
அரியாலை,யாழ்ப்பாணம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின்
அனுசரணையுடன்
திருநெல்வேலி வட்டம்/வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகங்கள்
இணைந்து நடத்தும்

## கண்பார்வை பாதிப்புற்றோருக்கான
## இலவச கண் பரிசோதனை முகாம்

காலம்: 31.08.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30மணி
இடம்: ப.நோ.கூ.சங்க மண்டபம், பண்டத்தரிப்பு

கண்பார்வை பரிசோதனை மேற்கொள்பவர் யாழ். போதனா வைத்தியசாலை - கண் சத்திரசிகிச்சை நிபுணர்
**வைத்திய கலாநிதி எஸ். குகதாசன் அவர்கள்**

குறிப்பு: 1. முகாமிற்கு வருகை தரும் ஒழுங்கின்படி குறிப்பிட்ட தொகையினரை மட்டும் பரிசோதனை செய்ய உள்ளதால் நேரத்திற்கு வருகை தரும்படி வேண்டுகின்றோம்.
2. பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல், வலிமேற்கு வாழ் நலிவுற்ற முதியோரை பயன்படும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

திருநெல்வேலி வட்டம் லயன்ஸ் கழகம் | வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம்

விளம்பர அனுசரணை: பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு

# பதவி வெற்றிடம்

எமது மருத்துவ நிலையத்திற்கு கீழ்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களுக்கு ஆள்சேர்க்கவுள்ளோம்.

1. வரவேற்பாளர்/லிகிதர்
2. மருத்துவ உதவியாளர்

ஆர்வமுடையவர்கள் நாளை (31.08.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்குச் சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும்.

குறிப்பு:-
ஆங்கிலம் எழுத வாசிக்க தெரிந்திருத்தல் வேண்டும்.

உரிமையாளர்
சுகர்னி மருத்துவ நிலையம்
578,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P:2228222

# 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
18 . 06 . 1933



உதிர்வு
20 . 08 . 1990

தோலகட்டி வசாவிளான்
அமரர் வைத்திலிங்கம் நடராசா
(முன்னாள் பொறுப்பதிகாரி, வலி.கிழக்கு பிரதேசசபை, அச்சுவேலி)

திதி:-30.08.2008


பாசமுள்ள தந்தையாய், கடமை உள்ள கணவராய்
நின்று எங்களை வழி நடத்திய அப்பாவே!
ஆண்டுகள் பதினெட்டு ஓடி மறைந்தாலும்
உங்களின் நினைவுகள், பாசங்கள் என்றும்
எங்களின் நெஞ்சங்களை விட்டு அகலாது!
வருடந் தவறாமல் கந்தனின்
தீர்த்தத்தில் நின்று கொண்டு கண்ணீர்
பூக்களினால் உங்களின்
காலடிகளுக்கு, உங்களின் ஆத்ம சாந்திக்காக
அஞ்சலி செலுத்தும் நாங்கள்!


திருமதி ந. சிவபாக்கியம்,
''துஷா இல்லம்'' கற்பகக்குணை,
உடுவில், சுன்னாகம்.
தொ.பே: 0779451663



என்றும் உங்களின்
அன்பு மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(77532)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## முகாமைத்துவப் போட்டியில் அல்வாய் வடமேற்கு கிராம அலுவலகம் முதலிடம்

மந்திகை,ஓக.30

பருத்தித்துறைப் பிரதேச செயலக கிராம அலுவலகங்களுக்கிடையே நடத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டியில் அல்வாய் வடமேற்கு கிராம அலுவலர் பிரிவு முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இப்பிரிவின் கிராம அலுவலராக ரீ.வதன ரூபன் பணியாற்றுகின்றார்.

இரண்டாம் இடத்தை அல்வாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவு பெற்றுள்ளது. இதன் கிராம அலுவலராக எஸ்.சிவபாலசிங்கம் கடமையாற்றுகின்றார்.

மூன்றாம் இடத்தைப் பருத்தித்துறை கிழக்கு கிராம அலுவலர் பிரிவு பெற்றுக்கொண்டது. இதன் கிராம அலுவலராக கே.யோகேந்திரநாதன் கடமையாற்றுகின்றார். (202-218)

நல்லைக் கந்தனின் தேர்த்திருவிழா நேற்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ முருக நாம கோஷம் வானைப் பிளக்க இடம்பெற்றது.

கந்தனின் பக்தர்கள் அங்கப் பிரதிட்டை செய்வதை முத லிரு படங்களிலும் காணலாம். பக்தர்கள் பறவைக் காவடி எடுத்து நேர்த்தி செய்வதை மூன்றாம், நான்காம் படங் களில் காணலாம்.

ஆலய வீதியில் தேர்வலம் வருவதையும் பக்தர்களின் பெரு வெள்ளத்தையும் ஐந்தாவது படத்திலும் தேரிலிருந்து நல்லைக்கந்தன் ஆலயத்திற்கு எழுந்தருளுவதை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன். நேசன்)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், 30

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இளங் கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய ஆதரவுடன் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று என்.வி.எம். நவரத்தினம், பரந்தாமன் நவரத்தினம் ஆகியோர் இசைக் கச்சேரி நிகழ்த்துவர்.

வயலின் - ஆர்.இராதாகிருஷ்ணன், மிருதங்கம்-எஸ்.மகேந்திரன், முகர்சிங்- எஸ்.விமல் சங்கர், தபேலா- சதாவேல்மாறன்.

* * *

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் பெருந் திருவிழாக் காலங்களில் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தப்பட்டுவரும் ஆன்மீக நிகழ்வில் இன்று 'முருகப்பெருமானால் ஆட்கொள்ளப்பட்ட அடியார்கள்' என்னும் தலைப்பில் சைவப்புலவர் கந்த சத்திய தாசன் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

சங்கரத்தை முருகமூர்த்தி அறநெறிப் பாடசாலை, அளவெட்டி காமாட்சி அம்மன் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம் பெறும்.

* * *

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு சைவமகாசபையின் ஏற்பாட்டில் நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் பிரம்ம ஸ்ரீ நித்தியானந்த சர்மா நிகழ்த்திவரும் 'கந்தபுராணம்' தொடர் சொற்பொழிவில் இன்று 'சேவலும் மயிலும்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். (203)




நல்லூர் கந்தசுவாமி கோவிலில்
இன்று 25ஆம் திருவிழா தீர்த்தம்
விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:
இரத்தினம் சேவிஸ் ஸ்ரேசன்
இல.30, சிறாம்பியடி லேன்,
யாழ்ப்பாணம்.


# நல்லூர்ப் பெருந்திருவிழா பக்திப்பாக்கள்



வறுமைப் பிணிக்கு மருந்தொன் றிருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்
வந்து மருந்தை அருந்திய மாதவர்
வாழ்ந்தார் வாழ்ந்தார் வாழ்ந்தாரே.

- யோகர் சுவாமிகள்.

## வெற்றிக்கு வேலே சாட்சி

வெற்றிக்கு அவன் வேலே சாட்சி - குமரன்
விழிகட்கு அரிதாகும் காட்சி
பற்றினால் அவன் பாதம் பற்று- அமர
பக்தியில் அவன் அருள் பெற்று

சேவலைக் கொடி கொண்டவீரன்- சூரர்
சேனையைப் புறங்கண்ட தீரன்
ஆவலை அவன் முடித்து வைப்பான் - நேராய்
அடியவர் முன் நல்லூரான் வந்து நிற்பான்

செ.பரமநாதன்

## நீரில் நீந்தி வருத்தம் மாற்ற வந்தனன்

பொறியதன் புதல்வன் கந்தன்
பொறிவழி புலப்ப டாத
நெறியதன் நிலையோன் நீரில்
நீந்தியே சாந்த மாகி
குறியதன் குணத்தி னோடு
குறிப்பிடும் அருள தாலே
வறியரின் வருத்தம் மாற்ற
வந்தனன் பதிநல் லூர்மேல்.

முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம்
மந்துவில் மேற்கு.

## பூரண அமைதிவர தீர்த்தமாடி வந்திடுவாய்

நல்லூரின் நாயகனே தீர்த்தமாடி வந்திடுவாய்
நம்வினைகள் போக்கிடவே தீர்த்தமாடி வந்திடுவாய்
எல்லோரும் உனைத் துதிக்கத் தீர்த்தமாடி வந்திடுவாய்
ஏழைகள் நாம் வாழ நீ தீர்த்தமாடி வந்திடுவாய்
வள்ளி மணாளனே நீ தீர்த்தமாடி வந்திடுவாய்
வரங்கள் பல தந்திடவே தீர்த்தமாடி வந்திடுவாய்
புள்ளி மயில் வாகனனே தீர்த்தமாடி வந்திடுவாய்
பூரண அமைதிவர நீ தீர்த்தமாடி வந்திடுவாய்

இராசையா ஸ்ரீதரன்

## சிந்தையிலே நிறைந்த சிங்காரவேலன்

வெற்றிவேல் முருகன் வீரத்திருப்பாதம்
பற்றிப் பணிந்து பாவிசைத்து நாளும்
போற்றிப் புகழ்ந்து புதுமலர் தூவித்தீபம்
ஏற்றி வழிபட்டால் ஏற்றவரம் எமைச் சேரும்

தந்தைக்குபதேசம் செய்து அடியார்தம்
சிந்தையிலே நிறைந்த சிங்காரவேலவனார்
விந்தைதனை உணர்ந்து உள்ளத்திலே உருகி
செந்தமிழ் பாவிசைத்து பாங்காய் வணங்கிடுவோம்.

த.அப்புத்துரை, மட்டுவில்.

## வரவேண்டும் இக்கணம் மயில் மீதிலே!

ஈராறு கண்களில் நாம்படும் அவலங்கள்
எதுவுமே தெரியவிலை யோ
இடையறா தல்லலில் மடிகிறார் தமிழர்கள்
எல்லோரும் இத்தீவிலே,
ஈராறு செவிகளில் நாம்சொலும் விண்ணப்பம்
ஏதேனும் கேட்கவிலையோ
இன்னல்கள் தீர்த்தருள் செய்யவடி வேலனே
இன்னுமே எழவில்லையோ
ஈராறு கைகளில் படைகொண்டு வந்தெங்கள்
இடர்தீர்க்கும் எண்ணமிலையோ
இன்னுமா தாமதம், உன்னையே நம்பினோம்
எழிலாரும் நல்லூரிலே
ஈராறு சகபதின் மூன்று நாள் உபவாசம்
இருக்கின்ற எங்களுக்காய்
இன்னருள் தந்தாள வரவேண்டும் வேலனே
இக்கணம் மயில் மீதிலே!

தனங்கிளப்பு வ.சின்னப்பா

## வந்து இடர் போக்கிடுவாய்

வண்ண மயில் வேலா
நல்லைப் பதி அழகா
அழகு தமிழ்த் தலைவா
வேண்டி வந்தோம் வரமொன்றுநீதா
கொடும் பகை சூழுது
கொடுமை பல கூடுது
கொஞ்சும் தமிழ் சாகுது
கெஞ்சி உள்ளம் வேகுது
நல்லை உறை வேலனே
வெற்றி வேல் தொடுத்து
வந்து துயர் தீருமே

கே.ரி.அரவிந்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ENGLISH LANGUAGE DEVELOPMENT PROGRAMME

- A three-month English course for School leavers/ Job seekers·
- The Course content comprises the four skills in the English Languagea Listening - Speaking, Reading & Writing·
- Evaluation & Award of certificate at the end of the programme

Commencement: 8th September 2008
Lessons on Weekdays from 2.30-3-30 p.m.
Closing Date: 5th September 2008

**English Language Teaching Unit, St.John's College, Jaffna.**
(சி/554265)


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
20.05.1920

மறைவு
30.08.2003

அமரர்
### முருகேசபிள்ளை கதிர்காமசேகரம்
(B.A. (Hons) London, Dip.- in Education (Ceylon)
(இளைப்பாறிய அதிபர்)

எமது குடும்பத் தலைவனாய் அன்பாய் பண்பாய் வாழ்ந்து உயர்கல்வி தந்து வையத்துள் சிறப்புற வாழவைத்து இறைவனடி சேர்ந்த எம் அன்புத் தெய்வத்தின் நினைவுடன் என்றென்றும் வாழ்கின்றோம்.

நினைவில் வாழும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சாந்திநிகேதன், அளவெட்டி. (77533)

## சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஒக.30

சிறுவர் பாதுகாப்பு நிதியம் 2009 ஆம் ஆண்டில் யாழ்.மாவட்டத்தில் மேற் கொள்ளவுள்ள திட்டங்கள் தொடர்பான பயிற்சிப்பட்டறை அடுத்த மாதம் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெறும் என அறிவிக் கப்பட்டுள்ளது. (50-300)

## தீவக வலயத்தில் தற்காலிக இணைப்பு பெற்ற ஆசிரியர்களுக்கு

ஊர்காவற்றுறை, ஒக.30

தீவகக் கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்புப் பெற்றுள்ள ஆசிரியர்களுக் கான இம்மாத சம்பளக் கொடுப்பனவை வங்கி கணக்கிற்கு அனுப்புவதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் ஆசிரியர் கள் விரைவாக வலயத்திற்கு வருகை தந்து சம்பளப்பட்டியலில் கையொப்பமிடுமாறு தீவகக் கல்விக் கணக்காளர் எஸ்.பரதன் கேட்டுள்ளார். (50-127)


## தேவை

தமிழ், ஆங்கிலம் கொம்பியூட்டர் ரைப்பிங் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது.
தொடர்பு: பிரகாந்த்,
56 B, பலாலி வீதி,
திருநெல்வேலி.021 222 3184
(77531)

## வேலையாள்கள் தேவை

பதவி :- 1.காசாளர்
2.சிட்டை எழுதுநர்
மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு அனுபவமுள்ள பணியாளர் உடன் தேவை.
சரஸ்வதி விலாஸ் சைவ உணவகம்
இல.70,பெரியகடை வீதி (கிராண்ட் பசார்)
யாழ்ப்பாணம். (சி/554456)

## COMPUTER EXPRESS
Institute of Information Technology
167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0212228250, 0777222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

**Diploma in Video Editing**
முன்னணி Video Mixing Software உட்பட
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

**Diploma in Graphic Designing**
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=

பிரபல கணனிக்கணக்கியல் மென்பொருள்........
Tally செய்முறைப்பயிற்சிகளுடன் கம்பனிகணக்குகளையும் உள்ளடக்கி..

வகுப்புக்கள் ஆரம்பம் : 01/09/2008 09.00AM


## அந்தியேட்டி அழைப்பு



29.07.2008 அன்று
காலமான
எமது குடும்பத் தலைவர்
### அமரர் நடேசு நவரத்தினம் (நவம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (30.08.2008) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத் தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரயும் அன்புடன் அழைக்கின்றோம்.

தல்லையப் புலம்,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி (சி/554427) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு:
30.04.1922

உதிர்வு:
27.07.2008

### அமரர் பூலோகசிங்கம் வெற்றிவேலு
(முன்னாள் அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

ஊனுயிர் அளித்து உத்தமர்களாக்கிய அப்பா
அறிவளித்து ஆற்றலூட்டி அகிலத்தில் சிறக்கவைத்தீர்
தன் பிள்ளைகள் என்றெண்ணி தென்மராட்சி ஈந்த மைந்தர்
கல்வியிலே மாட்சி பெற கவினுறு வழிசமைத்தீர்
தேசமெல்லாம் உம் பணிகள் சிறப்பாகச் செப்புகிறார்
நாமெல்லாம் அதுகேட்க நல்லதவம் செய்துவிட்டோம்
பாசமெல்லாம் பறந்துசெல்ல பாரைவிட்டு எங்குசென்றீர்
நேசமுள்ள பேரர் உங்கள் ஆசைமுகம் தேடுகின்றார்
நல்லவராய் வல்லவராய் நானிலத்தில் நாம் வாழ்ந்து
உங்கள் புகழ் காத்திடுவோம் உத்தமரே இது உறுதி
சங்கரனார் பாதமதில் சாந்தி நீங்கள் பெற்றிடவே
இறைஞ்சுகிறோம் அப்பாவே ஈரவிழிகளுடன்...

27.07.2008 இல் அமரத்துவம் அடைந்த எம் அன்புத் தந்தையின் மரணச் சடங்கில் கலந்துகொண்டு எம்துயரில் பங்குகொண்ட அனைத்து உள்ளங் களுக்கும், தொலைபேசி, தொலைநகல், தந்தி, கடிதங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் மலர் வளையம் சார்த்தியும் இரங்கல் உரை ஆற்றியும் தம் அஞ்சலிகளைச் செலுத் திய அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து நாளை மறுதினம் (01.09.2008) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அன்னாரின் நுணாவில் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப் பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவனகம், நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
1938.07.20

மறைவு:
2007.09.11

அமரர்
### சின்னட்டி இராசதுரை

திதி:அமாவாசை
(30.08.2008)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் – வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

ஆருயிர்த் துணைவனாய் ! அன்பு மிகு தந்தையாய்!
பாசமுள்ள மாமனாய்! மழலை மொழி பேசும் பேரனாய்!
அன்புள்ள சகோதரனாய்!
உதவிக் கரம் நீட்டும் அயலவனாய்! அரவணைக்கும் உறவினனாய்
கொடுத்துச் சிவந்த கரமும் கொடைக் குணமும்
போனதுவோ ஓராண்டு சென்றாலும் உங்கள் அன்புரு
மறையாது தீராது நம்துயரம் வாராயோ மீண்டெம் முன்னே
உள்ளத்தில் என்றும் நிலைத்திருப்பினும் எம் கண்ணீரைக்
காணிக்கையாகத் தருகின்றோம்.

சங்கானை மேற்கு,
நற்சாம்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிரட்டும் 'மம்மி- 03'

உலகமெங்கும் வசூல் மழையில் நனைந்தபடி, வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது 'மம்மி-03' என்ற ஆங்கிலத் திரைப்படம். மம்மி-01, மம்மி-02 ஆகியவற்றில் நடித்த பிரெண்டன் பிராசர், மரியா மெல்லோ ஆகிய இருவருமே இதிலும் நாயகன், நாயகியாய் வருகின்றனர். இவர்களைப் போலவே மம்மி திரைப்படத்தின் மூன்றாவது பாகத்தையும் 'ரோப் ஜோன்' என்பவரே இயக்கியுள்ளார். 'குங்ஃபூ' புகழ் ஜெட்லீ இப்படத்தில் வில்லனாகத் தோன்றியுள்ளார்.

இரண்டாயிரம் வருடத்துக்கு முன்னால் அபூர்வ மந்திர சக்தியால் சாகாவரம் பெற்றவர்கள் இருந்தார்கள். அவர்களைப் போல சாகாவரம் பெற்று இந்த உலகத்தையே அடிமையாக்குவதற்காக, அந்த மந்திரங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பொறுப்பை ஒரு பெண்ணிடம் கொடுக்கிறார் சீனச் சக்கவர்த்தி ஜெட்லீ.

அமரத்துவம் பெற்ற பிறகு அந்தப் பெண்ணை அடையத் திட்டமிடுகிறார். ஆனால் அந்த ப் பெண்ணோ தளபதியைக் காதலிக்கிறார். இதை அறிந்த மன்னன், தளபதியைக் கொன்று விட்டு அவளையும் கொலை செய்ய முயற்சிக்கிறார்.

தான் கற்ற மந்திர சக்தியால் மன்னனுக்குச் சாபம் கொடுத்து விட்டு அவள் அமரத்துவம் அடைகிறாள். மன்னனும் அவனது படை வீரர்களும் மம்மிகளாகி விடுகிறார்கள்.




2000 வருடங்களுக்கு பிறகு, ஆராய்ச்சியாளர்களான பிரெண்டன் பிராசர், மரியா மெல்லோ, மகன் லூக்போர்ட் ஆகியோர் சீனாவில் ஆராய்ச்சி செய்யும்போது ஜெட்லீயின் மம்மி கிடைக்கிறது.

அதற்கு உயிர் கொடுக்கும் மந்திரக் கண் இவர்களிடம் இருக்கிறது. அதைச் சீன தேசத்திடம் ஒப்படைக்க செல்கி றார்கள். இதற்கிடையில் ஒரு படைத்தளபதி அந்த கண் ணைக் கொண்டு மன்னனை உயிர்ப்பித்து அவனைக் கொண்டு உலகையே ஆளத் திட்டமிடுகின்றான். இந்த இரு அணிகளுக்குமிடையிலான போராட்டத்தில் மன் னனும், அவனது படைகளும் உயிர் பெறுகிறனர். இறுதி வெற்றி யாருக்கு என்பதைச் சொல்வதே மம்மி-03 திரைப்படத்தின் கதை.

முதல் இரண்டு பாகத்தைவிட இதில் விறுவிறுப்பும், கிராபிக்சும் அதிகம். பாலைவனத்தில் போர்க்களம், பூமிக்கு அடியில் அரண்மனை, இமயமலை உச்சியில் தங்கக் கோயில், பாறைக் குகைகள் புத்தர் கோயில், ராட்சதப் பனிக் கரடிகள், மூன்று தலை டிராகன் என்று படம் முழுக்க மிரட்டி யிருக்கிறார்கள். இத்திரைப்படம் தமிழாக்கம் செய்யப்பட்டு, தமிழிலும் இப்போது கலக்கிக் கொண்டிருக்கிறது.






## விஜய்க்கு ஜோடி யார்?



வெற்றி, தோல்வியைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் தொடர்ச்சியாகப் படங்களை வெளியிடுவது இளைய தளபதி விஜயின் பாணி. அழகிய தமிழ்மகன், குருவி என இரண்டு சுமாரான படங்களினால் கொஞ்சம் மனஞ் சோர்ந்த விஜய், தன்னுடைய அடுத்த படங் களை வெற்றிப் படங் களாக்க வேண்டுமென்ற வெறியில் இருக்கிறார். பிரபு தேவாவின் இயக்கத்தில் நயன்தாராவுடன் இணைந்து 'வில்லு' என்ற படத்தில் நடித்து வரும் விஜய், இப்போதே அடுத்த படத்துக்கும் ஆயத்தமாகி வருகிறார்.

பாலசுப்ரமணியத்தின் ஏ.வி.எம். நிறுவனத்திற்காக 'கில்லி'பட இயக்குநர் தரணியின் உதவியாளரான பாபுசிவன் என்பவரின் இயக்கத்திலேயே விஜயின் அடுத்தபடம் அமைய இருக்கிறது. படத்திற்கு 'முரட்டுக்காளை', 'வேட்டைக்காரன்' என்ற பெயர்கள் பரிசீலனையில் உள்ளன.

இப்படத்தில் அசின் தான் விஜயின் ஜோடி எனப் பரவலாகப் பேசப்பட்ட நிலையில் இத்தகவலை அசின் மறுத்திருக்கிறார். ''ஹிந்தியில் கஜினி பட விளம்பரப்படுத்தல், நிகழ்வுகள் சல்மான்கானுடன் நடிக்கும் ஹிந்திப் படம், பரத்பாலா இயக்கத்தில் வரப்போகும் கேரளப்படம் என்பவற்றுக்காக அடுத்தவருட இறுதிவரை என்னால் விஜய் போன்ற முன்னணி நடிகர்களின் படங்களில் நடிக்க முடியாதிருக்கிறது'' என்று கூறியிருக்கிறார் அசின்.

என்றாலும் விஜய் தரப்பு இன்னமும் அசினுக்காகக் காத்திருப்பதாகவே தகவல்கள் கசிகின்றன.

## ரம்பாவும் தற்கொலை வதந்தியும்

'உள்ளத்தை அள்ளித்தா ' படத்தின் மூலம் ரசிகர்களைக் கொள்ளை கொண்ட நடிகை ரம்பா அண்மையில் ஆபத்தான நிலையில் சென்னை விஜயா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து ரம்பா தற்கொலைக்கு முயன்றார் என்று வதந்தி பரவியது. ஆனால், ரம்பா தரப்பினர் இதனை மறுத்தனர்.



உணவுக் குழறுபடியால் ஏற்பட்ட சின்ன உடல் நலக்குறைவுதான் என அவர்கள் சொன்னதை யாரும் நம்புவதாக இல்லை.

'த்ரீ ரோசஸ்' படத்தைத் தயாரித்ததில் கழுத்துவரை கடன், போஜ்பூரி நடிகர் ரவிகிஷ்னுடன் காதல் முறிவு, வாய்ப்புக்கள் வற்றிப் போனது என ரம்பாவின் தற்கொலை முயற்சிக்கு காரணங்கள் பல சொல்லப்பட்டன.

இவை அனைத்தையும் உடல் நலம் தேறிய நிலையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த ரம்பா மறுத்தார். தற் கொலை முயற்சி பற்றிய வதந்தி அவருக்கு அதிர்ச்சியளித்ததை அவரது விளக் கத்தில் உணர முடிந்தது.

வரலட்சுமி விரதம், கிருஷ்ண ஜெயந்தி எனத் தொடர்ந்து விரதம் மேற் கொண்டிருக்கிறார் ரம்பா. அத்துடன் பெருத்துப்போன உடம்பு இளைக்க உணவுக் கட்டுப்பாட்டையும் கடைப் பிடித்திருக்கிறார். இவை எல்லாமாகச் சேர்ந்து வாந்தியுடன் மயக்கமாகியிருக்கிறார் ரம்பா. இதனையே சில ஊடகங் கள் கண், காது வைத்து அவசரக் குடுக் கைத் தனமாக ரம்பா 'தற்கொலைக்கு முயற்சி' எனச் செய்தியாக்கிவிட்டன.

## கவர்ச்சி காட்டும் சுந்தர்.சி!

இயக்குநராகவிருந்து, நடிகராக அரிதாரம் பூசியவர்களில், வெற்றிக்கொடியை நாட் டியவர் சுந்தர்.சி! ஒரு காலத்தில் 'குஷ்புவின் கணவர்' என்றே அறியப்பட்டிருந்த காலம் போய் இன்று 'சுந்தரின் மனைவி குஷ்பு' என்னுமளவிற்கு நிலைமை தலைகீழாகி விட்டது.

தலைநகரம், வீராப்பு, சண்டை, ஆயுதம் செய்வோம் என இவர் வரிசையாக நடித்த படங்களெல்லாம் வசூலை வாரிக் குவித்துள்ளன. ஒரு நெறியாளராக இருந்த அனுப வத்தால் மக்களின் ரசனைக்கேற்ற கதைகளில் நடிப்பதே இவரது வெற்றிக்கு மூல காரணமெனக் கருதப்படுகின்றது.

இப்போது அடுத்த வெற்றியைச் சுவைப்பதற்காக 'சுந்தர்.சி' நடித்துவரும் படம் 'தீ'. ஒரு பொலிஸ் அதிகாரியாக இருந்து வாழ்வில் தோல்விகளைச் சந்திக்கும் ஒருவன், அரசியல்வாதியாக மாறி நியாயத்தை நிலை நாட்டுகின்றான். இதுவே 'தீ' படத்தின் கதை.



படத்தில் ஒரு காட்சியில் நிர்வாணமாக நடித்துள்ளார் சுந்தர்.சி. ''கதையின் திருப்பு முனையே இந்த நிர்வாணக் காட்சிதான். அதனாற்தான் இப்படி நடிக்க ஒப்புக் கொண்டேன்'' என்கிறார் சுந்தர்.சி. கதையில்லாமல் நடிகைகளின் சதையை மட்டுமே நம்புகின்ற தென்னிந்திய சினிமாவில், கதைக்காக உடம்பைக்காட்டுகின்ற சுந்தர்.சி பாராட்டுக்குரியவர்தானே?

## கரன் இன்னொரு கமல்?

ஆண்மையும், பெண்மையும் இணைந்த கலவையாகவுள்ள மனிதர்களை அரவாணிகள், அல்லது திருநங்கைகள் என்று சொல்வார்கள்.

ஆனால் தமிழ்ச்சினிமாவில் அரவாணிகளை ஒரு 'மாதிரியாகவே' காட்டுவார்கள். அந்தப் போக்கு கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருகிறது. அவர்களும் மனிதர்கள்தான் என்ற உணர்வோடு படம் எடுக்கின்ற இயக்குநர்களுக்கு வரவேற்புக் கிடைக்குமா என்பது போகப் போகத்தான் தெரியும். ஏனென்றால் அவர்களுக்கு முக் கியத்துவம் கொடுத்து எடுக்கப்பட்ட படங்களில் ஒன்றான 'தெனாவட்டு' இனிமேல்தான் வெளிவரப்போகின்றது. இதில் படம் முழுவதும் முக்கிய வேடத்தில் நடித்திருக்கிறார் அரவாணி ஒருவர்.



இன்னொரு படத்தை இனிமேல்தான் துவங்கவே போகிறார்கள். கொக்கி, கருப்பசாமி குத்தகைதாரர், காத்தவராயன் போன்ற படங்களில் வித்தியாசமான வேடங்களில் நடித்து இன்னொரு கமல்ஹாசன் எனப் புகழ்பெற்ற கரண் ஹீரோவாக நடிக்கும் இப்படத்திற்கு 'அர்த்தனாரி' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. 'ஒரு கல்லூரியின் கதை' என்ற படத்தை இயக்கிய நந்தா பெரியசாமி இப்படத்தை இயக்குகிறார்.

''ஒவ்வொரு படங்களிலும் வித்தியாசமான பாத்திரங்களில் நடித்து வரும் எனக்கு இந்த கதையைக் கேட்டவுடன் பிடித்து விட்டது. அதனால் உடனே நடிக்க ஒப்புக்கொண்டேன்'' என்றார் கரண். சொன்ன மாதிரியே இது அவருக்கு மிகச் சமீபத்தில் சொல்லப்பட்டகதை! பொதுவாகக் கதையைக் கேட்டு, வரிசைப்படி ஒப்புக்கொள்ளும் கரண், இதற்கு மட்டும் கொஞ்சம் முன்னுரிமை கொடுத்திருக்கிறாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்.....



ஜிரிசற் நிறுவனத்தின்அனுசரணையுடன் கோப்பாய்ப் பிரதேச செயலகத்தால் "விதாதா" வள நிலையத்தில் நடத்தப்பட்ட பயிற்சி நெறியில் பங்குபற்றிய பயனாளிகளுக்கு தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினர் சீ.ஏ.மோகன்றாஸ் பயனாளி ஒருவருக்கு உபகரணம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.



ஆவரங்கால் கிழக்கு லிங்கன் முன்பள்ளி விளையாட்டு விழாவில் பாலர்களின் விநோத உடை அலங்காரத்தை விருந்தினர்கள் மதிப்பீடு செய்கின்றனர். (படம்: அச்சுவேலி செய்தியாளர்)



சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழகப் பதில் நூலகர் திருமதி இ.கருணாநந்தராஜா மங்கள விளக்கேற்றி வைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் நா.சிவநேசன், வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.விஜேந்திரசர்மா, வைத்தியரத்தினம், திருமதி ச.அருமைநாயகம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.




யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகம் உடுவில் இளைஞர்மன்ற முன்பள்ளிக்கு தளபாடங்களை வழங்கியுள்ளது. முன்பள்ளி மாணவர்களிடம் உபகரணங்கள் வழங்கப்படுவதையும் றோட்டறிக்கழகத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.



யாழ். இலக்கிய வட்டம் வழங்கும் நாவேந்தன் சிறுகதை விருதை [illegible] னுக்கு நாவேந்தனின் சகோதரர் கவிஞர் துரைசிங்கம் விருது வழங்கிக் கௌரவிக்கிறார்.



இலங்கை, இந்திய எழுத்தாளர்களின் 60 நூல்கள் மணிமேகலைப் பிரசுரத்தால் அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நிகழ்வில்மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி க.தங்கேஸ்வரியின் 3 நூல்களை எழுத்தாளர் செங்கை ஆழியானிடமிருந்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

நூலாசிரியர், மணிமேகலைப் பிரசுர இயக்குனர் ரவி தமிழ்வாணன், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பின் க.கனகசபை ஆகியோரும் படத்தில் உள்ளனர்.



சுழிபுரம் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள், உள்ளீடுகளை கரிதாஸ்-கியுடெக் நிறுவனத்தின் பிரதிநிதி எஸ்.பாலமோகன் வழங்குவதையும், கிராம அலுவலர் ந.ரஞ்சன் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் அருகில் நிற்பதையும் காணலாம். (படம்: மு.சந்திரகுமார்)




சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பத்தாவது வருட ஆண்டு விழா அண்மையில் சாவகச்சேரி புவேந்தன் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது.

முதுகலைமாணி(M.A)பட்டம் பெற்ற தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலர் செ. உமாபாலன், சங்க எண் பார்வையாளர் மா. தயாகுமாரன் ஆகியோர் இந் நிகழ்வில் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

நகர்ப் பிரிவு கிராம அலுவலர் க. சிவசரவணநாதன் பரிசில்களை வழங்குவதையும் அருகில் சங்க போசகர் திருமதி ரு.இராசரத்தினம் அமர்ந்திருப்பதையும் காணலாம். (படங்கள்:தென்னவன்)



நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூகநிலையத்தினால் நடத்தப்பட்ட 'கலை, மாலை' நிகழ்வில் கலாபூசணம் அண்ணாவியார் டானியல் பெலிக்கானின் நெறியாள்கையில் சென் மேரிஸ் முத்தமிழ் கலைஞர்களால் நடிக்கப்பெற்ற விஜய மனோகரன் தென்மோடிக் கூத்தில் வரும் இறுதிக் காட்சி.



ஆனைக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையின் புதிய கட்டடத்திற்கு பால் காய்ச்சும் வைபவத்தில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் [illegible] வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கரைப்பிரான் ஆலயத்திலிருந்து [illegible] எடுத்து வருவதையும் அருகில்பொதுமக்கள்சுவாமிப் படங்களுடன்நிற்பதையும்படத்தில் காணலாம். (படம்: நவாலி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பட்டறிவு தரும் பாடம்

''எமது யுத்த நடவடிக்கைகள் நாம் வகுத்த திட்டங்களின்படி வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் புலிகளை முற்றாகத் தோற்கடித்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு காலவரையறை ஒன்றை விதிக்க முடியாது. அவ்வாறு விதிப்பது மகா முட்டாள் தனம்.''

- இப்படித் தெரிவித்திருக்கின்றார் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், நாட்டின் ஜனாதிபதிக்கு அடுத்து பாதுகாப்புத் துறையில் அதிக அதிகாரமும் செல்வாக்கும் கொண்டவரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து, யுத்தத்துக்கு முடிவு கட்டுவதற்கான காலவரையறைகளை எதிர்க்கட்சியினரும் வேறு தரப்பினரும் இதுவரை காலமும் விதித்து வந்தனர் என்பது போலவும் -

அது தவறு என்ற மாதிரியும் -

இப்போது கதைவிடுகின்றார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்.

புலிகளை முற்றாக அழித்து, யுத்தத்துக்கு முடிவு கட்டுவது பற்றிய வீர,தீரப் பிரதாபச் சூளுரைகளையும் சவால்களையும் அவ்வப்போது வெளியிட்டு, தென்னிலங்கை மக்களை உசுப்பேற்றி, சூடாக்கி வந்த தரப்பினர் எல்லோரும், ''அப்படிக் காலவரையறை விதிப்பது பெரும் முட்டாள்தனம்'' என்று இப்போது விமர்சிக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பக்கத்தில்தான் இன்றும் இருக்கின்றனர்.

அடுத்த பிறந்த நாளைக் கொண்டாடுவதற்குப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிரோடு இருக்கமாட்டார் என்று அவரது வாழ்வுக்கும் -

அதேபோல இந்த யுத்தத்தை அரசுப் படைகளுக்கு வெற்றியாக முடிப்பதற்கும் -

காலவரையறை விதிக்கும் அறிவிப்புகள் அவ்வப்போது அவரது பக்கத்தில இருந்துதான் வந்தன என்பதை நாம் மறந்து விடவோ, மறைத்து விடவோ முடியாது.

அப்படிக் காலவரையறை விதிப்பது முட்டாள் தனமானது என்ற உண்மையைப் புரிந்துகொள்ளும் சூழல் இப்போதாவது ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமே.

பாதுகாப்பு விவகாரங்களில் தேர்ந்த விற்பன்னரான இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் இலங்கை யுத்தத்தை ஒட்டி அண்மையில் கூறிய கருத்தை, பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய இன்னும் சரியாக உள்வாங்கியிருப்பார் என்றால் 'யுத்தத்துக்குக் காலவரையறை விதிப்பது முட்டாள்தனம்' என்ற தமது தற்போதைய ஒப்புதல் வாக்குமூலத்தையும் தாண்டி வேறு விடயங்களையும் வெளியிட்டிருப்பார் என்று எதிர் பார்த்திருக்க முடியும்.

''இலங்கைப் படைகள் மோதல்களில் (Battles) வெல்லலாம். ஆனால் இறுதி யுத்தத்தில் (War) வெல்வது கடினம்'' - என்று இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன் தமது இலங்கை விஜயத்தின் பின் ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்தார்.

ஆனால் அதை ஏற்று, ஒப்புக்கொள்ளும் மனநிலையில் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சோ, அதன் செயலாளரோ, இலங்கைப் பாதுகாப்பு உயர் வட்டாரங்களோ இல்லவே இல்லை என்பதும் தெளிவு.

என்றாலும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்குக் காலக்கெடு விதிக்க முடியாது என்ற யதார்த்தத்தை உணர்ந்து கொள்ளும் அளவுக்கு களநிலைப் பாடத்தை அவர்கள் கற்றுக்கொள்ளும் சூழல் ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்க அம்சமே.

பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் மேலாதிக்கச் சிந்தனைப் போக்கில் சிக்கிக்கிடக்கும் கொழும்பு அரச ஆட்சிப் பீடம், ஈழத் தமிழருக்கு எதிரான யுத்தத்தில் வென்று, புலிகளை முற்றாக அழித்தொழித்து அடக்குவதன் மூலம், தாம் விரும்பும் திட்டம் ஒன்றைத் தமிழர்கள் தலையில் தீர்வு என்ற பெயரில் வல்வந்தமாகத் திணித்து, தமது பேரினவாத ஆதிக்கத்தை இலங்கைத் தீவில் நிரந்தரமாக நிலைநிறுத்திக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் - நப்பாசையில் - பகல் கனவில் - ஆழ்ந்து கிடக்கின்றது.

அந்த அதீத நம்பிக்கைக் கோட்டையின் அத்திபாரமாகவும், பலம்மிக்க சுவராகவும் திகழ்வது புலிகளை நிரந்தரமாக அழித்து - யுத்தத்தில் ஒரேயடியாக வென்று விடலாம் - என்ற ஒரே உறுதிப்பாடுதான்.

அந்த உறுதிப்பாட்டுக்குக் காலக்கெடு விதிக்கும் அறிவிப்புகளை வெளியிட்டு, அதன்மூலம் தென்னிலங்கையில் போர் எழுச்சியைத் திட்டமிட்டு விஸ்வரூபம் எடுக்க வைக்க கொழும்பு அரசின் பாதுகாப்புத் தரப்பால் அவ்வப்போது முயற்சிகள் எடுக்கப்பட்டன.

எனினும் யதார்த்தக் கள நிலைமை, எதிர்பார்த்த காலக்கெடுக்களுக்குள் யுத்த விடயங்களை ஒப்பேற்ற முடியாது என்ற படிப்பினையை இப்போது தந்து நிற்பதால் அந்தக் காலக்கெடு விதித்த தனது தரப்புகளைப் பார்த்து 'முட்டாள் தனமான கணிப்பீடு' என்று குறிப்பிட வேண்டிய கட்டாயத்துக்கு இப்போது வந்திருக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா - லலித் அத்துலத்முதலி , ஜனாதிபதி பிரேமதாஸா - ரஞ்சன் விஜேரத்தினா, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - அனுருத்த ரத்வத்தை என்று முன்னைய ஜோடிகள் பல இலங்கை யுத்தம் தொடர்பாகக் கற்றுக்கொண்ட பல பாடங்களை மஹிந்த ராஜபக்ஷ - கோத்தபாய ராஜபக்ஷ சகோதரர்களும் படித்துக்கொள்ள இன்னும் சில காலம் பிடிக்கும்.

அப்போது 'யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர காலக்கெடு விதிக்க முடியாது!' - என்ற ஞானத்தையும் தாண்டி மேலும் பல விடயங்களையும் அந்த ஜோடி உணர்ந்துகொள்ளக் கிடைக்கும்.

# செல்வச் சந்நிதி ஆலய பெருந்திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பம்

வடமராட்சி, ஓக.30

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும், மறுநாள் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கைலாசவாகனத் திருவிழாவும், 13 ஆம் திகதி சனிக்கிழமை சப்பரத்திரு விழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

தினமும் காலைத் திருவிழா 8 மணிக்கும், மாலைத் திருவிழா பிற்பகல் 4 மணிக்கும் நடைபெறும்.

போக்குவரத்து, குடிதண்ணீர், சுகாதார வசதிகள் என்பன ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பருத்தித்துறையிலிருந்து கடற்கரை வீதிவழியாக யாழ்ப்பாணம், மானிப்பாய், நவாலி போன்ற இடங்களுக்குச் சேவையிலீடுபடும் பஸ்கள் யாவும் பெருந்திருவிழாக் காலத்தில் செல்வச் சந்நிதி ஊடாகவே சேவையில் ஈடுபடுத்தப்படும்.

கோயிலைச் சுற்றியுள்ள சந்நிதியான் ஆச்சிரமம் உள்ளிட்ட பல மடங்களில் திருவிழாக் காலத்தில் தினமும் அன்னதானம் வழங்கப்படும்.

# வலி.தென் மேற்கில் கலாசார விழா

யாழ்ப்பாணம், ஓக.30

வலி.தென் மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் கலாசார விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கலாசார பேரவையின் தலைவரும் பிரதேச செயலருமான திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஸும் சிறப்பு விருந்தினர் களாக யாழ்.மாவட்ட நீதிபதி இ.வசந்தசேனன், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அதிபர் பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் பண்பாட்டு நிகழ்வுகள், கலைஞர் கௌரவிப்பு, நடன நிகழ்வுகள், சகுந்தலை இசை நாடகம் என்பன இடம்பெறும்.

# வலி.தெற்கில் நாளை கலை இலக்கிய விழா

வலி.தெற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும் கலை, இலக்கியப் பெருவிழா நாளை காலை 8.30 மணிக்கு ஏழாலை மேற்கு முத்தமிழ் மன்ற கலாசார மண்டபத்தில் கலாசாரப் பேரவைத் தலைவரும் பிரதேச செயலருமான திருமதி மஞ்சுளாதேவி சதீஸன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஸும் சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, செயலக திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக முன்னாள் அதிபரும் எழுத்தாளருமான சிவசரவணபவன் (சிற்பி), கலாபூசணம் சிவசண்முக வடிவேல், சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.பி. அரசகுமார் ஆகியோரும் கலந்துகொள்வர். (1-86)

# நல்லூரில் கற்பூரத் தீச்சுவாலையில் சிக்கி 11 பக்தர்கள் காயமடைந்தனர்

## கந்தன் தேரிலிருந்து இறங்கிவரும் வேளையில் சம்பவம்

நேற்று நடைபெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவின் போது கற்பூரச் சட்டிகளின் தீச்சுவாலையில் சிக்கிய பதினொரு பக்தர்கள் பலத்த தீக்காயங்களுக்குள்ளானார்கள்.

தேர் வீதி வலம் வந்த பின்னர், தேரிலிருந்து முருகனை இறக்கி வரும்பொழுது ஏற்பட்ட நெரிசல் காரணமாக கற்பூரச் சட்டிகளின் மீது பக்தர்கள் சிலர் விழ நேர்ந்துள்ளது.

அதன்போது ஆண்கள், பெண்கள் அடங்கலாக பதினொரு பக்தர்கள் பலத்த தீக்காயங்களுக்குள்ளானார்கள். இச்சம்பவத்தால் தேர்த்திருவிழாவுக்காகத் திரண்டிருந்த பக்தர்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இச் சம்பவம் இடம்பெற்றதும், அவ்விடத்துக்கு விரைந்த இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். பிரிவினரும், சேவாலங்காப் பிரதிநிதிகளும் காயமடைந்த பக்தர்களை மீட்டெடுத்து, அம்புலன்ஸ் வாகனங்களினூடாக யாழ். போதனா வைத்தியசாலையில் துரிதமாக அனுமதித்தனர்.

இச் சம்பவத்தில் தீக்காயங்களிற்கு உள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களின் விவரம் வருமாறு:-

ஐ.ரதீஸ்வரன் (வயது - 36, நவாலி), ஏ.அருண்ராஜ் (வயது- 18, நல்லூர்), ஆர். குகேந்திரமாலா (வயது- 13, இணுவில்), என்.வினேதீஸ்வரன் (வயது - 27, இணுவில்), கே.யோகமலர் (வயது- 57, சுன்னாகம்), எஸ்.சபேசன் (வயது- 8, கந்தர்மடம்), எஸ்.ஜெககாந்தினி (வயது-26, கொக்குவில்), பி.கொலிசன் (வயது -24, யாழ்ப்பாணம்), எஸ். ஸ்ரீதரன் (வயது 36, மானிப்பாய்), என். தில்லைச்சிவன் (வயது - 27, இணுவில்), எஸ். அரியமலர் (வயது - 53, வட்டுக் கோட்டை).

(50- 111-25-78)

# திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம், ஓக.30

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் கல்விசார் கலைத்துவம் சார் படக் காட்சித் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு இந்திய நெறியாளர் தங்கர் பச்சானின் நெறியாள்கையில் உருவான 'ஒன்பது ரூபாய் நோட்டு' திரைப்படம் வீடியோ காட்சியாக அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்படக்காட்சியின் இறுதியில் திரைப்படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து பயன் பெற முடியுமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவிக்கின்றனர்.

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.30

சங்குவேலி இலங்கை வங்கிக் கிராமம் அறிமுக விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சங்குவேலி 'நியாப்' பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கி மானிப்பாய் கிளையின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு சங்குவேலி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி சந்திரன் மேரி றொசலின் தலைமை வகிப்பார்.

நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் கலந்து கொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம், ஓக.30

சரசாலை வடக்கு நித்திலா மகளிர் ஐக்கிய நாணய சங்கத்தின் வெள்ளி விழா நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவி திருமதி க.ஞானச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக தென் மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், யாழ்.மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், சாவகச்சேரி மக்கள் வங்கி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர். (1-207)

* * *

கரவெட்டி, ஓக.30

சரசாலை வடக்கு வேநடியகாடு கணபதி படிப்பகத்தினர் நடத்திய தையல் பயிற்சி அலகின் 'கேக் ஐசிங்' கண்காட்சி இன்றும் நாளையும் முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை வல்வை மகளிர் மகா வித்தியாலய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

படிப்பகத்தின் உப தலைவர் ச.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறைப் பிரதேச செயலக நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் திருமதி க.சிவகுமார் கலந்து கொள்வார்.

(202-70)


நல்லூரில் கற்பூரத் தீச்சுவாலையில் சிக்கி காயமடைந்த பக்தர்களில் சிலர்.

# நாளை

| | |
|---|---|
| ஆவணி 15 | 31.08.2008 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | பிரதமை |
| | பி.இ. 01.24 வரை |
| நட்சத்திரம் : | பூரம் |
| | பி.இ 01.56 வரை |
| நல்லநேரம் : | 09.05 - 10.35 |
| ராகுகாலம் : | 04.35 - 06.05 |

# பாடசாலைகளின் நிர்மாணப்பணிகளுக்கு கல்விப்பணிமனை சிமெந்து விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் முன்னெடுக்கப்படும் நிர்மாண, திருத்த வேலைகளுக்கு யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை சிமெந்து விநியோகிக்கவுள்ளது.

சிமெந்து பெற விண்ணப்பித்த பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் உரிய நிதி ஏற்பாட்டுடன்பணிமனையின்பாடசாலை வேலைகள் பகுதியுடன் நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அன்றையதினமே சிமெந்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை முத்துலிங்கம் (J.P.)



### (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர், உரிமையாளர்: தேவி அரிசி ஆலை , ஸ்ரீ தேவி கொமினிக்கேசன் (அச்சுவேலி), ஸ்ரீ தேவி கொமினிக்கேசன் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி, இராச வீதிச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை முத்துலிங்கம் (J.P) 26.08.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் தேவமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சபாபதி- கண்ணகை தம்பதியரின் அன்பு மருமகனும் ஸ்ரீசுயானி, ஸ்ரீசுசியந்தினி (ஜெமிலா- பிரான்ஸ்), ஸ்ரீ சுபீஸ்கரன் (லண்டன்), ஸ்ரீ சுபானு (வவுனியா), ஸ்ரீசுகிர்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீதேவராஜலிங்கம் (செல்வா படமாளிகை), மோகனதாஸ் (பிரான்ஸ்), சுதாகர் (பொறியியலாளர்- வவுனியா), சுகிர்தா (லண்டன்), வாஜினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஸ்ரீ நிஷானி, பிரின்சி (பிரான்ஸ்), விதுஷ்ணன் (பிரான்ஸ்), இலக்கியா (பிரான்ஸ்), ஜஸ்மிலன் (லண்டன்), ஜசின் (லண்டன்), நிதுஷன் (வவுனியா), நிதுஷிகா (வவுனியா) ஆகியோரின் பாசமிகு பேரனும் செல்லப்பாக்கியம் (திரவியம்), சிவபாக்கியம் (குண்டுமணி), வன்னியசிங்கம் (லாலா) ஆகியோரின் அன்பு அண்ணனும் காலஞ்சென்ற பரமகுரு (வைத்தியர்), அழகரத்தினம் (லண்டன்) , இராஜகுலசிங்கம் (சபாறதினி மோட்டோர்ஸ்), இரத்தினசிங்கம் (சதா பல்பொருள் வாணிபம்), யோகசிங்கம் (தெனுஜன் ரேடர்ஸ்), ஜெயகுலசிங்கம் (கனடா), றஞ்சிதமலர் (திருகோணமலை), சந்திரமலர் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜலஜா (விஜிதா அரிசி ஆலை), ஜெமேலா (யசீலன் ஸ்ரூடியோ), ஜெயராசா, ஜெயானந்தன், நிலாமதி ( கனடா), நீர்மதி (பிரான்ஸ்), கஜல்மதி (பிரான்ஸ்), துஸ்யந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.08.2008) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராச வீதிச் சந்தி,
அச்சுவேலி.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(ஒ/534472)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகை மீனவர் மீது இலங்கைக் கடற்படையினர் கண்மூடித்தனத் தாக்குதல்; விடியும் வரை நீந்த உத்தரவு!

நாகபட்டினம், ஒக. 30

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நாகபட்டினம் மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் நிர்வாணப்படுத்தி இறப்பர் தடிகளால் கொடூரமாகத் தாக்கினர். அவர்களை கடலுக்குள் தள்ளிவிட்டு படகிலிருந்த மீன்களைச் சூறையாடிச் சென்றனர்.

- இவ்வாறு தமிழக நாளேடொன்றில் வெளியான செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அந்த நாளேட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நாகை அடுத்த செருதூர் நாகப்பன் என்பவருக்குச் சொந்தமான படகில் சில தினங்களுக்கு முன், கடலில் மீன்பிடிக்கச் சென்ற சிவசுப்பிரமணியன், குப்புசாமி, பாலகிஷ்ணன், ராஜிவ் காந்தி, ரமேஷ் ஆகிய ஐந்து மீனவர்களும் இதுவரை கரை திரும்பவில்லை. இந்நிலையில், அதே பகுதியைச் சேர்ந்த இடும்பன் (வயது - 30), சகுந்தன் (வயது - 22), ரமேஷ் (வயது - 18) ஆகியோர் விசைப்படகில் கடந்த 25ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்றனர்.

26ஆம் திகதி அதிகாலை நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது, அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் இவர்களின் படகின் மீது துப்பாக்கியால் சுட்டனர். படகில் இருந்த மூவரும் படுத்துக் கொண்டதால் உயிர் தப்பினர். படகின் அருகே வந்த இலங்கைக் கடற்படையினர் மூவரையும் நிர்வாணமாக்கி, இறப்பர் தடியால் அடித்துக் கடலில் தள்ளிவிட்டு விடியும் வரை நீந்தச் சொல்லியுள்ளனர். மேலும், மீனவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களை தமது படகில் ஏற்றிக்கொண்ட இலங்கைக் கடற்படையினர், படகில் இருந்த டீசலை கடலில் கொட்டிவிட்டுச் சென்றுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர் சென்றபின் மயங்கிய நிலையில் இருந்த மீனவர்களை, அந்த வழியாகச் சென்ற நாகை கீச்சாங்குப்பம் விசைப்படகில் இருந்தவர்கள் காப்பாற்றி, டீசலைக் கொடுத்து கரைக்கு அனுப்பி வைத்துள்ளனர். வழியில் மறித்த இலங்கைக் கடற்படையினரின் வேறொரு படகு மீனவர்களை மீண்டும் தாக்கி, மீனவரின் படகை தங்களது படகில் கட்டி இழுத்துக் கொண்டு சென்று இலங்கை எல்லையில் விட்டுச் சென்றுள்ளனர். டீசல் தீர்ந்த நிலையில் பாய்மரத்தின் உதவியால் கடந்த புதன் இரவு கரைக்குத் திரும்பிய மீனவர்கள், இது குறித்து மாவட்ட நிர்வாகம் மற்றும் மீன்வளத் துறையினரிடம் முறைப்பாடு தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து வேளாங்கண்ணி பொலிஸார் விசாரித்து வருகின்றனர். இதையடுத்து செருதூர், விழுந்தமாவடி கிராம மீனவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இலங்கைக் கடற்படையினரின் அத்துமீறலால், நாகை மாவட்ட மீனவர்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை கச்சதீவுக்கு அருகே இராமேஸ்வரம் மீனவர்கள் 13 பேர் இலங்கைக் கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தமை தெரிந்ததே.

## இலங்கை மீனவர் 28 பேருக்கு [illegible] இராமநாதபுரம் நீதிமன்றம் உத்தரவு

இலங்கை மீனவர்கள் 28 பேருக்கு இராமநாதபுரம் நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்ததோடு, மேலும் படகோட்டிகளுக்கு அபராதமும் விதித்து நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது.

இலங்கை -நீர்கொழும்புப் பகுதியைச் சேர்ந்த அந்தோனி பீட்டர் பெரேரா, ரேசன் பெரேரா, பிரேமானந்தா உள்ளிட்ட 28 மீனவர்கள் கடந்த ஜூன் 21 இல் கன்னியாகுமரி அருகே இந்தியக் கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடித்துக்கொண்டிருந்தனர்.

ரோந்து சென்ற இந்தியக் கடலோர காவல் படையினர் அவர்களைக் கைது செய்தது டன் அவர்கள் வந்த ஆறுபடகுகளை தூத்துக்குடி தெர்மல்நகர் பொலிஸிடம் ஒப்படைத்தனர்.

இராமநாதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த வழக்கு இராமநாதபுரம் சி.ஜே.எம். நீதிமன் றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. நீதிபதிரவிவழக்கை விசாரித்து இலங்கை மீனவர் 28 பேருக்கும் மூன்றுமாதச் சிறையும் படகோட்டிகளுக்கு கூடுதலாக தலா இரண்டாயிரம் ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

## பிரிட்டிஷ் பிரதமருக்கு கொலை மிரட்டல்; முஸ்லிம் இளைஞர்கள் மூவர் கைது

லண்டன், ஒக.31

பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரவுனுக்கெதிராக விடுவிக்கப்பட்ட கொலைமிரட்டல் தொடர்பாக மூவர் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் மீது பயங்கரவாதம் தொடர்பான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என லாங்கெஷியர் பொலிஸ் வட்டாரம் பி.பி.சி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தது.

இம் மூவரில் இசாக் கனாமி என்னும் 22 வயது இளைஞருக்கு எதிராக, கொலைச் சதி உட்பட நான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இவர் பிளக்போர்ன் என்னுமிடத்தைச் சேர்ந்தவர் என பொலிஸ் அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

அப்பாஸ் இக்பால் என்னும் 23 வயது இளைஞரும், இலியாஸ் இக்பால் என்னும் 21 வயது இளைஞருமே மற்றுமிருவராவர். பயங்கரவாதம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள், பொருள்கள் ஆகியவற்றை தம்மோடு வைத்திருந்திருந்தமை தொடர்பாக இவர்கள் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இவ்விருவரும் சகோதரர்கள். பிளக்பேனைச் சேர்ந்த பேர்சிவல் வீதியைச் சேர்ந்தவர்கள். ஜிகாத் இணையத்தின் மூலமாக இக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் முன்னாள் பிரதமர் டொனி பிளயருக் கெதிராகவும் இத்தகைய மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது என்றும் பொலிஸ் அதிகாரியொருவர் விவரித்தார்.

அல்-கொய்தா சம்பந்தப்பட்ட ஆவணங்கள், அல்-கொய்தாவுக்கு ஆதரவு நல்குமாறு கோரும் அறிக்கைகள் , பயங்கரவாதம் சம்பந்தப்பட்ட பிரசுரங்கள் ஆகியவை வைத்திருந்தமை தொடர்பாகவும், குரோம்வெல் வீதியைச் சேர்ந்த இசாக்கனாமி மீது மேலதிகக் குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

## கண்ணைத் தோண்டி கடவுளுக்கு காணிக்கை செலுத்திய நவீன கால கர்நாடகக் கண்ணப்பர்

பெங்களூர், ஒக. 30

பக்தர் ஒருவர் தன்னுடைய வலது கண்ணை கத்தியால் தோண்டி எடுத்து கடவுளுக்கு காணிக்கையாக வழங்கிய திகிலூட்டும் சம்பவம் ஒன்று கர்நாடக மாநிலத்தில் நடந்துள்ளது.

பாகல்கோட்டை மாவட்டம் பாதாமி தாலுகாவில் உள்ள அடகல் கிராமத்தை சேர்ந்த முதுகப்பா (வயது-41), என்ற விவசாயியே தற்கால கண்ணப்ப நாயனார் ஆவார்.

இச்சம்பவம் தொடர்பான விவரம் வருமாறு:-

நேற்று முன்தினம் அதிகாலை முதுகப்பா, சங்கரய்யா சுவாமி மடத்திலுள்ள வீரபத்ரேசுவரா கோவிலுக்கு சென்று அங்கு பூஜை செய்தார். அதன் பின்னர் தான் கொண்டு சென்ற கத்தியால் தனது வலது கண்ணைத் தோண்டி எடுத்தார் என்றும் பின்னர் கண்ணை சாமி சிலையின் காலடியில் வைத்தார் எனவும் அப்போது 'ஜெய் வீர பத்ரா' என்று அவர் குரல் எழுப்பினார் எனவும் கூறப்படுகிறது.



கண் இமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்த இந்தச் சம்பவத்தை பார்த்து அங்கிருந்த மற்ற பக்தர்கள் அதிர்ச்சியடைந்தனர். தகவல் அறிந்த நூற்றுக்கணக்கான கிராம மக்கள் கோவிலுக்கு வந்து, கண்ணப்ப நாயனாரின் மறு அவதாரம் முதுகப்பா எனக் கூறினர்.

கண்ணில் இரத்தம் வழிய அமர்ந்திருந்த முதுகப்பாவை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முயன்ற போது முதுகப்பா அங்கிருந்து நகர மறுத்து விட்டார் என்றும் தொடர்ந்து பக்தி பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தார் எனவும் கூறப்படு கிறது.

இதற்கிடையில் நீண்ட நேரமாகியும் முதுகப்பா வீட்டிற்கு வராததால் வீட்டார் அவரை தேட ஆரம்பித்தனர். முதுகப்பா அடிக்கடி வீரபத்ரேசுவரா கோவிலுக்கு போவதால் அங்கு சென்று பார்த்தபோது வலது கண்ணில் இரத்தம் வழிந்தபடி படுத்திருந்தார். இதனால் குடும்பத்தினர் அதிர்ச்சி அடைந்தனர். பின்னர் முதுகப் பாவை வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்று பாகல் கோட்டை அரசு வைத் தியசாலையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

இந்தச் சம்பவம் பற்றி முதுகப்பாவிடம் கேட்ட போது -

எனது கனவில் வீரபத்ரேசுவரா சாமி வந்தார். அப்போது எனக்கு ஏதோ ஒரு வித சக்தி வந்ததைப் போல உணர்ந்தேன். அதனால் நான் கோவிலுக்கு சென்று எனது வலது கண்ணை எடுத்து காணிக்கையாகச் செலுத்தினேன்.

சிறிது நேரம் கழிந்து எனது இடது கண்ணையும் கடவுளுக்கு காணிக்கையாக வழங்க முயற்சித்தேன். ஆனால் அதற்குள் எனது குடும்பத்தினர் அங்கு வந்து என்னைத் தடுத்து விட்டனர் - என்றார்.

காளஹஸ்தியில் வசித்த கண்ணப்ப நாயனார் சிவலிங்கத்திலுள்ள கண்ணிலிருந்து ரத்தம் வழிந்ததால் அதற்குப் பதிலாக தனது கண்ணைப் பிடுங்கி எடுத்து சிலையில் பொருத்தியதாக பக்தி இலக்கியம் கூறுகின்றது. (அ-சி)

## ஜோர்ஜிய விவகாரத்தை பூதாகரமாக்கி அரசியல் நாடகமாடுகிறது அமெரிக்கா!

### ரஷ்ய ஜனாதிபதி குற்றச்சாட்டு

மொஸ்கோ, ஒக.30

''அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவரின் நலன் கருதி, ஜோர்ஜிய விவகாரத்தை ஒரு பூதாகரமான பிரச்சினையாக உலகுக்குக் காட்ட, அமெரிக்கா நாடகமாடுகிறது. அது மக்களை திசை திருப்பிவிடக்கூடிய ஒரு சாதனையாகிவிட மாட்டாது'' என ரஷ்ய ஜனாதிபதி விளாதிமிர் புடின் பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

சி.என்.என். செய்திச் சேவைக்கு தாம் அளித்துள்ள இப்பேட்டியில், அவர் தென் ஒசட்டியாவில் இடம்பெற்று வந்த மோதல்களின் போது, ஜோர்ஜியாவில் அமெரிக்கப் பிரஜைகளின் நடமாட்டம் அதிகமாக இருந்துள்ளது. அவர்களுள் அவ்வப்போது, தம் தலைவர்களிடமிருந்து உத்தரவுகளைப் பெற்று வந்துள்ளார்கள்'' என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

''தென் ஒசட்டியா மீது ஜோர்ஜியா படையெடுத்தது. இது விடயத்தில் ரஷ்யா குறுக்கிட்டது. இச்சமயத்தில் ஜோர்ஜியாவிலிருந்தே அமெரிக்கப் பிரஜைகள் ரஷ்யாவுக்கு எதிரான- ஆத்திரமூட்டக் கூடிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந் துள்ளார்கள். அவர்களை அமெரிக்கத் தலைவர்களின் நேரடி பணிப்புரைகள் முடுக்கி வந்துள்ளன'' என்றும் அதில் புடின் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

''ஜோர்ஜிய இராணுவத்துக்கு, அமெரிக்கா பயிற்சியளித்துள்ளது. வகை தொகையின்றி ஆயுதங்களை வாரிவழங்கியுள்ளது.இக் 'கைங்கரியங்களை' அது ஒப்புக்கொள்ள வேண்டும். சமாதான முன்னெடுப்புகளால், ஏன் ஓர் இணக்கப்பாடான பரிகாரத்தை நாட முடியாது? எட்ட முடியாது? '' என்றும் அவர்கேள்வி எழுப்பியுள்ளார்.

''இரு தரப்புகளில் ஒரு தரப்புக்கு ஆயுதங்களை வாரி வழங்கலாம். இது மிக சுலபமான ஒரு காரியம். அதன் மூலம் மற்றைய தரப்பினரைக் கொன்று குவிக்க, உந்து சக்தியாக மாறலாம். ஆத்திர மூட்டலாம். வேலை முடிந்து விடும். இது அவசியம் தானா? என்றும் புடின் கேட்டுள்ளார்.

''இதை நோக்கும் போது, இச்சண்டையை அமெரிக்காவிலுள்ள ஒருவரே மூட்டிவிட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எம் மத்தியில் எழுந்துள்ளது. இதன் மூலம் ஒரு பதற்ற நிலையை உருவாக்கி, தனது மத்தியஸ்தத்தை மகிமைப்படுத்தலாம். தமது கட்சி சார்பு வேட்பாளருக்கு, கட்சியின் மூலமாகவே பெரும் செல்வாக்கை ஈட்டிக் கொடுக்கலாம் என்ற நப்பாசையில் அவர் செயல்பட்டுள்ளார் என்றே கருதுகிறோம்'' என்றும் புடின் மனந் திறந்து கூறியுள்ளார்.

(அ-சி)


### தவறிவிட்டது

கைதடி வடக்கு, கைதடி எனும் முகவரியுடைய சிவலோகநாதன் தெய்வாராணி என்பவரது தேசிய அடையாள அட்டை இல. 676909837V மற்றும் கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் எனும் முகவரியுடைய விசேட அடையாள அட்டை இல.0902026384, யாழ் நகரிலிருந்து அச்சுவேலி சிற்றூர்தியில் கட்டப்பிராய் குளத்தடிக்கு இடையில் [illegible] அன்று தவறவிடப்பட்டுள்ளன. கண்[illegible]தயவுசெய்து, யாழ் நகர் சிற்றூர்தி நேரக் கணிப்பாளரிடம் ஒப்படைத்துதவவும்.

## திருமண அழைப்பு

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான சர்வதாரி வருடம் ஆவணி மாதம் 16 ஆம் நாள் (01.09.2008) திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் 11.00 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

திரு.திருமதி மகாதேவா தம்பதியரின் புத்திரன் திருநிறைச் செல்வன் **பகீரதன்** அவர்களுக்கும்

திரு.திருமதி ஆறுமுகம் தம்பதியரின் புதல்வி திருநிறைச் செல்வி **ஜெமிலா** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் கொண்டு பருத்தித்துறை, சிவன் கோயில் பர்வவர்த்தினி மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்ய பெற்றோர் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இருவீட்டார் அழைப்பு)

திரு.திருமதி மகாதேவா இராசலட்சுமி
சிவன் கோயிலடி, தும்பளை வீதி,
பருத்தித்துறை

திரு.திருமதி ஆறுமுகம் ராணி
[illegible]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமை இரவு விமானப்படைக் ஹெலிக் கொப்டர்கள் துண்டுப்பிரசுரங் களை கிளிநொச்சிப்பகுதியில் வீசின.

விடுதலைப் புலிகள் பாரிய தோல்வியை எதிர்நோக்குகின்றனர் எனவும் இதன் கார ணமாக அவர்களுடைய பகுதிகளில் வாழும் பொதுமக்களைப் பாதுகாப்புக் கருதி வெளியேறுமாறும் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் கோரப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுப் பகுதியிலும் இது போன்று துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட் டதை விமானப்படைப் பேச்சாளர் ஜனக நாணயக்கார தெரிவித்துள்ளார். (சி)

## நாவற்குழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 20வயது மதிக்கப்பட்ட இந்த இளை ஞனின் சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

மரணமான இளைஞனின் சடலம் அரைக் காட்சட்டையும் ரீசேட்டும் அணிந்த நிலை யில் காணப்பட்டது.

இதேவேளை- பாதுகாப்பு அமைச்சு நேற்றிரவு வெளியிட்ட அறிக்கையில், அரி யாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் படையினர் மீது கிரனேட் தாக்குதலை மேற்கொள்ள முயன்ற விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அதில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றவர் தப்பிவிட்டார்.

கொல்லப்பட்டவருக்கு அருகில் இருந்து இரண்டு கிரனேட்டுகள், சயனைட் ஆகியன மீட்கப்பட்டன.

சடலம் பின்னர் பொலிஸார் மூலம் யாழ். ஆஸ்பத்திரியில் கையளிக்கப்பட் டுள்ளது- என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## நளினியை விடுதலை செய்யக் கூடாது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாகமுத்து நளினியின் மனு தொடர்பாக பதில் மனுத்தாக்கல் செய்யுமாறு தமிழக அரசுக்கு உத்தரவிட்டிருந்தார்.

அந்த உத்தரவுக்கு அமைய, தமிழக அர சின் மாநில உள்துறைச் செயலாளர், சிறைத் துறை கூடுதல் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் சார்பில் நேற்றுப் பதில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண் டனை பெற்றவர்களை விடுதலை செய் யக் கூடாது என மாநில அரசு கொள்கை அளவில் முடிவு செய்திருப்பதாக என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஆலோசனைக் குழுவில் இவர்கள் தாக்கல் செய்த மனுக்கள் நிரா கரிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள தமிழக அரசு சி.பி.ஐ. விசாரணை செய்த வழக்கில் தமிழக அரசு தலையிட முடியாது என்றும் தெரிவித்துள்ளது.

முன்னாள் பிரதமரை கொலை செய் தது, திட்டமிட்டு கொடூரச் சம்பவத்தை நிகழ்த் தியது, விடுதலைப் புலிகள் மீதான உணர்வு இன்னும் குறையாமல் உள்ளது என்று மூன்று காரணங்களை ஆலோ சனைக்குழு தெரிவித்தது. அதன் அடிப் படையில் இவர் களை விடுதலை செய்ய முடியாது என்று தமிழக அரசு உத்தரவு பிறப்பித்திருந்தது.

20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருப்பவர்களின் தண்டனையை குறைக் கலாம் என்பது நிர்வாக ரீதியான காரண மாக எடுக்கப்பட்டது. இந்த வழக்கில் அது பொருந்தாது.

மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற கோட் ஸேவை விடுவிக்க உயர் நீதிமன்றம் மறுத் தது. ஆயுள் காலம் முடியும் வரை சிறையில் இருக்க வேண்டும் என உத்தர விட்டிருந்தது.

எனவே நளினி உட்பட மூவரின் மனுக் களை தள்ளுபடி செய்ய வேண்டும் - என்று தமிழக அரசின் பதில் மனுவில் குறிப் பிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு சார் பில் ஆஜரான சொலி சிட்டார் ஜெனரல் ரவீந்திரனின் கோரிக் கையை ஏற்று அவர் பதில் மனு தாக்கல் செய்ய அவகாசம் வழங் கிய நீதிபதி வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

## நல்லைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள் காட்சி கொடுத்தார்.

நல்லைக்கந்தனின் அருள் கடாட்சத்தை யும் பெறுவதற்காக குடாநாட்டின் மூலை முடுக்குகளில் இருந்தும் பக்தர்கள் அதி காலை முதலே ஆலயத்தை வந்து சேர்ந்த வண்ணமிருந்தனர்.

போக்குவரத்துச்சபை, தனியார் பஸ் சேவை ஆகியன நேரடியாக ஆலயம் வரை நடத் தப்பட்டதால், பக்தர்கள் வாகனங்கள் மூலம் ஆலயத்தை வந்தடைய வாய்ப்பாக இருந் தது. ஆலயத்தில் கூடிய பக்தர்கள் அங்கப் பிர திட்டை செய்தும், அடி அழித்தும், கற் பூரச்சட்டி ஏந்தியும், பறவைக்காவடி, செடில் காவடி எடுத் தும் தமது நேர்த்திகளை பூர்த்தி செய்தனர்.

நண்பகல் ஒருமணிக்கு பின்னரும் ஆலய வீதிகளிலும், சூழலிலும் பெரும் எண் ணிக்கையான பக்தர்களைக் காணக்கூடிய தாக இருந்தது. அடியவர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். (அ-1-111-68)

## முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகமாலை கண்டல் பகுதியில் செறி வான எறிகணை சூட்டாதரவுடன் படையி னர் முன்நகர்வை மேற்கொண்டனர்.

இந்த முன்நகர்வுக்கு எதிராக தாக்குதல் நடத்தி அவர்களின் முன்நகர்வை முறிய டித்தோம். அவ்வேளை மூன்றுக்கும் அதி கமான படையினர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர் - இதே பகுதியில் நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு படையினரின் டாங்கி மீது ஆர்.பி.ஜி.தாக் குதல் நடத்தப்பட்டுள்ளது - என்று விடு தலைப் புலிகள் அறிவித்துள் ளனர்.

இத்தாக்குதல் தொடர்பாக படைத்தரப் புத் தகவல் எதுவும் நேற்றிரவு இச்செய்தி எழுதப்படும் வரை வெளியாகவில்லை.

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலின்போது ஈழமாறன் ரவி (வயது - 33), வி. சேகர் (வயது - 42), உதயகுமார் (வயது - 19), பிரதீப் (வயது - 28), விஜி (வயது - 28) ஆகிய ஈ.பி.டி. பியினரே படுகாயமடைந்துள்ளனர் என மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் எஸ். சிவாணந்தராஜா (சிவா மாமா) தெரிவித்தார்.

படுகாயமடைந்த கைதிகளுக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளது.

சம்பவத்தையடுத்து, நேற்று மட்டக்க ளப்பு நகரில் பெரும் பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டது. நகரெங்கும் படையினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். சம்பவம் இடம்பெற்ற சிறைக்கூடப் பகுதியை படம் பிடிக்க ஊடகவியலாளர்கள் அனு மதிக்கப்படவில்லை.

(சி)

## பொதுத் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

இலங்கை அரசமைப்பு ஏற்பாடுகளின்படி -

ஜனாதிபதித் தேர்தல் ஒன்றில் வெற்றி பெற்று முதல் தடவையாக அதிகாரத்துக்கு வரும் ஒரு ஜனாதிபதி, தமது முதலாவது பதவிக் காலத்தின் முதல் நான்கு ஆண்டு கள் முடிந்த பின்னர் - எஞ்சிய இரு ஆண் டுப் பதவிக் காலத்துக்குள் தாம் விரும்பிய ஒரு வேளையில் - அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு அழைப்பு விடுக்க முடியும்.

அத்தகைய தேர்தலில் அவரே மீண்டும் வெற்றிபெறுவாரானால், தமது முதலா வது பதவிக் காலத்தின் எஞ்சிய காலத்துக்கு அதிகாரத்தைப் பிரயோகித்த பின்னர், அதன் முடிவில் அடுத்த ஆறு ஆண்டுகள் பதவிக் காலத்துக்கான அதிகாரத்தை மீண்டும் பதவியேற்றுத் தொடரமுடியும். இதன்மூலம் இரண்டாவது தேர்தலை முற்கூட்டியே நடத்திவிட்டு மொத்தம் பன்னிரண்டு ஆண் டுகாலம் அவர் ஆட்சியில் இருக்க முடியும்.

ஆனால் இரண்டாவது பதவிக் காலத் துக்கான தேர்தலில் அவர் தோற்பாராயின், வெற்றிபெற்ற வேட்பாளர் உடனடியா கவே அடுத்த ஜனாதிபதியாகப் பதவியேற் கும் நிலைமை ஏற்பட்டுவிடும்.

### சந்திரிகாவும் முற்கூட்டியே தேர்தல் நடத்தினார்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் தமது இரண்டாவது பதவிக் காலத்துக்கான தேர்தலை ஓராண்டு முற்கூட்டியே நடத்தி வென்றார். எனினும், தமது முதலாவது பதவிக் காலத்தின் எஞ்சிய ஒரு வருடத் தைப் பூர்த்தி செய்ய முன்னரே, இரண் டாவது பதவிக் காலத்துக்கான பதவியை, இரண்டாவது தேர்தல் முடிந்த கையோடே பகிரங்க சத்தியப்பிரமாணம் மூலம் அவர் ஆரம்பித்து விட்டதால் முதல்ாவது பதவிக் காலத்தின் எஞ்சிய ஓராண்டு அதிகாரத்தை அவர் இழக்க வேண்டியவரானார். இத னால் மொத்தம் பதினொரு ஆண்டு காலமே அவர் அதிகாரத்தில் இருக்க முடிந்தது.

இரண்டாவது ஜனாதிபதித் தேர்தலில் வென்ற பின்னர், தமது முதலாவது பதவிக் காலத்தின் எஞ்சிய ஒருவருடம் முடியும் வரை காத்திருந்து, அதன் பின்னர் தமது இரண்டாவது பதவிக் காலத்துக்கான பதவியேற்பை அவர் செய்திருப் பாராயின் மொத்தம் பன்னிரண்டு ஆண் டுகள் அவர் பதவி யில் இருந்திருக்க முடியும்.

## பூநகரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் மீதே நேற்று முற்பகல் 11.30 மணிக்கு விமானப்படையினர் தாக்குதல் நடத் தினர் எனப் படைத்தரப்பில் கூறப்பட்டது.

அன்றைய தினம் பிற்பகல் ஒரு மணிய ளவில் நாச்சிக்குடாவிற்கு வடக்கே மூன்று கிலோமீற்றர் தொலைவில் உள்ள விடுத லைப் புலிகளின் மோட்டார் தளங்களை இலக் குவைத்தே விமானப்படையின் ஜெற் விமானங்கள் தாக்குதலினை நடத்தின என வும் படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது.

## இன்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 28ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை வரை நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ஊரடங்கு நீக்கம் நடைமுறையில் இருப் பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வழமை போல் இரவு 9மணி முதல் அதிகாலை 4.30 மணி வரை ஊரடங்கு நடைமுறையில் இருக் கும் எனவும் அறிவிக்கப்பட்டது. (அ-1)

இந்தப் பின்பு லத்திலேயே ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ தமது அடுத்த பதவிக் காலத்தையும் நேரத்துடன் உறுதிப்படுத்த விரும்புகிறார் எனத் தெரிகின்றது.

2004 ஏப்ரலில் தெரிவான தற்போதைய நாடாளுமன்றின் பதவிக்காலம் 2010 ஏப் ரல் வரையாகும்.

இன்றைய நிலையில் நாடாளுமன்றத் துக்கான பொதுத் தேர்தலை முற்கூட்டியே நடத்திக் குழப்பாமல் 2010 ஏப்ரலுக்கு முன் னர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்தித் தமது ஆட்சி அதிகாரத்தை நீடித்து, உறு திப்படுத்துவது மேல் என்று ஜனாதிபதி மஹிந்த கருதுகின்றார்.

2005 நவம்பர் 17 இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வென்று மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானார். 2009 நவம்பர் 19 ஆம் திகதி அவரது ஆட்சி நான்கு ஆண்டு களைப் பூர்த்தி செய்யும். அதன் பின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு அவர் அழைப்பு விடுக்கமுடியும்.

### தமது பதவிக் காலத்தை நீடிப்பதில் உறுதி

2010 ஜனவரி,பெப்ரவரி மாதங்களில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை அவர் விரும்பினால் நடத்தலாம்.

அப்படி ஒரு தேர்தலை நடத்தி, அதில் வென்று அதன் பின்னர் அதற்கு அடுத்த எட்டு ஆண்டுகளும் தாமே ஜனாதிபதி என்பதை உறுதிப்படுத்தி,2017 நவம்பர் வரை தமது அதிகாரமே செல்லுபடியாகும் என்பதை நிலைநிறுத்தி, அதற்குப் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலுக்கு அழைப்பு விடுத்தால், நாடாளுமன்றத் தேர்தலிலும் இலகுவாகப் பெரு வெற்றி யீட்ட முடியும் என ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ கருது கின்றார் என்று கூறப்படுகின் றது.இதற்கான தேர்தல் திட்டங்களை யும்,வியூகங்களையும் அவரும் அவரது ஆலோசகர்களும் இப்போதே வகுக்கத் தொடங்கி விட்டனர் என விடய மறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

யுத்த நடவடிக்கைகளில் அடுத்து வரும் காலங்களில் கணிசமான வெற்றி கிட்டும் என்று கருதும் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ, அதன் மூலம் அதிகரிக்கும் தமது செல்வாக்கையும் -

நலிவடைந்திருக்கும் எதிர்க்கட்சி களின் செயல்திறனின்மையையும் -

இலாவகமாகப் பயன்படுத்தி அடுத்த ஆண்டு இறுதிக்குப் பின் தாம் நடத்த உத்தேசித்திருக்கும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் இலகுவாக வெற்றி யீட்ட முடியும் என்றும் உறுதியாக அவர் நம்புகின் றார் - எனவும் கூறப்படு கின்றது.

(அ-சி)


NEW SCIENCE HALL
JAFFNA
2009 A/L
(2008 A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது)
DAY CLASS
எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம் - 01.09.2008
திங்கள் காலை 9 மணி

IDM After A/L
இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனிக்கல்லூரி
இலவச கணனிக் கருத்தரங்கு
A/L மாணவர்களுக்கான விசேட இலவச கணனிக் கருத்தரங்கு 30-08-2008 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.
அனைவரும் பங்கு பற்றி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்
021 222 9901
216 நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

விற்பனையாகிறது
தமிழ் மூலம் சிங்களம் குமாரோதைய, குமாரஜன உட்பட 30 வகையான புத்தகங்கள் 10 வகையான தமிழ், சிங்கள, ஆங்கில அகராதிகள்.
அன்னை புத்தகசாலை
இல. 7, நவீன சந்தை
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 9881

SINHALA PERSONAL CLASS
சிங்களம் பேச, வாசிக்க , எழுத மற்றும் இலக்கணம்
(முற்றிலும் இலகுவான-வித்தியாசமான முறையில்)
ஆரம்பம்:-31.08.2008 (ஞாயிறு)
சனி/ஞாயிறு:- காலை 7.00 - 11.00
மாலை 3.00 - 6.00 (01 மணித்தியால வகுப்புகள்)
41, றக்கா லேன், கண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
ஸ்ரீமாஸ்டர்

Microsoft Certified
Systems Engineer / Administrator
★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 31.08.2008 12.00PM
Become an Engineer
விபரங்கள் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com

LAVA HOSPITAL
லாவா வைத்தியசாலை
75,Temple Road, Jaffna 75, கோயில் வீதி, யாழ்ப்பாணம்
★ வெளி நோயாளர் பிரிவு
★ விசேட வைத்திய நிபுணர்களின் சேவை
★ நவீன ஸ்கான் (SCAN) வசதிகள்
★ சகல விதமான இரத்த, சல பரிசோதனைகள்
உடல் பருமனை குறைப்பதற்கான விசேட சிகிச்சைகள்
கிளை - 151, கன்னாதிட்டி வீதி, 02, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்
இயக்குநர், தொ.பே.: 021 222 7251
Web.www.pspezone.com/lavaonline


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.